# ஞானக்கதிர்

உதயன் வழங்கும்
இந்து மத இதழ்

ஆடி - ஆவணி
விலை - 50/=




## குருப்பெயர்ச்சி
## உங்களுக்கு எப்படி?





தென்னிந்திய யாத்திரை

மலைக்கோட்டை விநாயகர்,
பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை
வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி,
9 நவக்கிரக ஆலயங்கள்,
மேல்மருவத்தூர், பொற்கோவில்,
மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர்,
சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர்,
கன்னியாகுமாரி, ஸ்ரீரெங்கம்,
பிரம்மாகோவில் உட்பட 65இற்கும்
அதிக ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்
(இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை உணவு,
குடிதண்ணீர், தரமான தங்குமிடம், A/C வாகன வசதி,
கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி,
60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள்
உட்பட) மேலதிக விபரங்களைக் கேட்டறிந்து
பதிவு செய்யவும்.

கலாநிதி T ஸ்ரீரெங்கநாதன்
0777 68 0102
மகன் ராஜன்: 077 736 2154
Face Book ID:
Sridevi Sri Ranganathan Thuraiappah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரின் ஒளி....


| | |
|---|---|
| நல்லூர் கந்தசுவாமி கோவில் | 1 |
| பித்தர் வேடங்கொண்ட சித்தர் | 2 |
| வேலால் வினைமுடிப்பாய் இக்கணமே | 3 |
| பகழிக் கூத்தருக்குப் பரிசளித்த அழகன் | 4 |
| உடலில் திருநீறு அணியக்கூடிய இடங்கள் | 5 |
| விநாயகருக்கு கொழுக்கட்டை படைப்பது ஏன் | 6 |
| நல்வாழ்வு நிச்சயம் கிட்டும் | 9 |
| சீதைவளர்த்த கிளி | 10 |
| நந்திக்கடலோரம் நமையாளும் கண்ணகை | 14 |
| இறைவனுக்கு அபிஷேகங்கள், அர்ச்சனைகள், ஆராதனைகள் செய்வது ஏன்? | 12 |
| பிள்ளையைப் பெத்தா கண்ணீரு தென்னையை வைச்சா இளநீரு | 11 |
| விஞ்ஞானிகள் தேடி அலையும் ஞானம் | 12 |
| கதிர்காமருக்கு அருளிய கல்லோடைக்கந்தன் | 17 |
| ஆறுமுகங்களின் பலன்கள் | 19 |
| குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? | 21 |


ஞானச் செல்வங்களே!

தங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள், படைப்புகள், புகைப்படங்கள், ஓவியங்கள் அனைத்தையும் அனுப்ப வேண்டிய முகவரி:


**ஞானக்கதிர்**
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### சந்தா விபரம்

**ஒரு வருடத்துக்கான சந்தா தபால் செலவுடன் 600 ரூபாய்கள் மட்டும்.**

தங்களின் பெயர் முகவரியுடன் காசுக்கட்டளை பின்வருமாறு எடுக்கப்படல் வேண்டும்.
நியூ உதயன் பப்பிளிக்கேசன் பிறைவேற் லிமிட்டெட்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஞானச் செல்வங்களே வணக்கம்

ஆனி பிறந்து விட்டால் ஆலயவழிபாட்டிற்குப் பஞ்சமில்லை. கோயில்களெல்லாம் விழாக்கோலம். வீடுகள் தோறும் மாக்கோலம். இந்து சமயப் பண்பாட்டின் இருப்பிடமே இதுதான் கோயில் வழிபாட்டில் ஈடுபடும் பக்த கோடிகள் ஆடை அலங்காரங்களில் பண்பாட்டுக்கோலத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நாகரிகம் என்னும் பெயரால் நம்மவர் பேணிப்பாதுகாத்த கலாசாரத்தைக் கைவிடமுடியுமா? கட்டிக்காக்கத் தானே வேண்டும். இளைய தலைமுறையினர் சமய வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவது குறைவென்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது இளைய தலைமுறையின் குறையன்று எமது வீடுகளில் உள்ள குறைபாடு. நாளாந்த வீட்டுக் கடமைகளில் வழிபாடு, கலாசார நடைமுறைகள், பண்பாட்டுக்கோலங்களைக் கடைப்பிடிக்க பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டியது பெற்றோரே. தவறவிட்டுவிட்டு தலையைப் போட்டுச் சொறிவதில் என்னதான் பயனுண்டு. வீட்டுக்கு வரும் ஏழைக்கு குழந்தை கையினால் அரிசியோ,பணமோ, பொருளோ கொடுக்கச் செய்வது பழக்கத்திற்காகத் தானே. பெற்றோர்களே விழித்திடுங்கள் தூங்கிவிடாதீர்கள்.


**வெளியீடு** ::
உதயன் பத்திரிகை
நியூ உதயன் பப்பளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட்
361 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குழு** ::
திரு.ம.வ.கானமயில்நாதன் - பிரதம ஆசிரியர் உதயன் பத்திரிகை
கலாபூஷணம் கு.சரவணபவானந்தன் B.A,PGD,SLPSI, SLEAS
யசோதை சரவணபவன் - பணிப்பாளர், உதயன் குழுமம்
செ.மகேசு - ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்,வ.கி.மா
செ.செல்வராசா - B.A,PGD,SLPSI,
கே.ஏ.ஜெயக்குமார் - Sp.Trd. SLPS 2.I

**ஆலோசனை** ::
பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்
சிவ.மகாலிங்கம் - B.A,PGD (ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்- இந்து சமயத் திணைக்களம்)
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

**வடிவமைப்பு** : த.தினேஸ்,
ந.வதனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தலவரலாறு குறித்த ஆய்வுகளை மதிப்பிடும் போது சில தெளிவான முடிவுகள் கிடைக்கின்றன. ஆயினும் கோவில் எப்போது யாராற் கட்டப்பட்டது என்பது குறித்துக்கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. கி.பி.1248ஆண் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தியான சிங்கையாரியரின் முதன் மந்திரி புவனேகுபாவால் குருக்கள் வளவு என்ற இன்றைய கோவிலுள்ள இடத்தில் அமைக்கப்பட்டெதன்றே கருத்தொன்றுண்டு. இந்த நிகழ்வுக்கான வரலாற்றாதாரமாகக் கைலாயமாலையிலுள்ள தனிப்பாடலொன்றைக் கொள்ளலாம். கோவில் கி.பி. 87 ஆம் ஆண்டிலா 948 ஆம் ஆண்டிலா முதன் முதலில் கட்டப்பட்டது என்பது குறித்து ஐயப்பாடுகள் உள்ளன. யாழ்ப்பாண வைபவமாலையில் கி.பி.1250 இல் கோட்டையில் இருந்து வந்த செண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டது என்று கூறுவார். எனினும் யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்ற 13 ஆம் நூற்றாண்டில் இந்தக் கோவிலமைக்கப்பட்டெதனக் கொள்வதே சிறப்பானது என்பது ஆய்வாளர் கருத்து. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற சரித்திர நூலின் ஆசிரியரான முதலியார் செ. இராசநாயகம் குறிப்பிடுகிறார்.இந்த காலம் கி.பி 1210 என இவர் காண்கிறார். பேராசிரியர்கள் சி. பத்மநாதனும் , கா. இந்திரபாலாவும், யாழ்ப்பாண இராச்சியம்13 ஆம் நூற்றாண்டிலே தான் நிலைத்ததெனக் கொள்கின்றனர். கலிங்கத்து மாகனை முதலாவது இலங்கையாரியனாகச் சுவாமி ஞானப்பிரகாசர் இணங்கான்கிறார். எனவே முதலாவது ஆலயம் 1248 இல் அமைக்கப்பட்டதென்று முடிவு சொல்ல ஆதாரங்களுள்ளன.

தற்போது நல்லூர்க்கந்தசுவாமி கோவில் இருக்குமிடத்தில் கோவிலை அமைத்தவர் யார் என்பது திட்டவட்டமாக தெரியவில்லை. புரான கோவிலை பிராமணரின் பரம்பரையினைச் சேர்ந்த கிருஷ்ணையர் சுப்பையர் என்பவர் கி.பி.1793 இல் ஒல்லாந்த அரசின் அனுமதி பெற்று ஒரு சிறு கொட்டிலாக அமைத்து அதில் வேல் வைத்துப் பூசை செய்து வந்தார் என ஒரு சாரார் கூறுகின்றனர்.

கிருஷ்ணையர் என்பவர்தான் முதன் முதலில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை ஆதியிற் கட்டினார் என்றும், அவரின் மகன் சுப்பையார் தான் முதன்முதலிற் கட்டினார் என்றும் இரு சாரார் இந்தக் கோவிலின் தோற்றங் குறித்த செய்திகளை முன்வைப்பர். இன்னும் சிலர் தொன் ஜுவான் இராகுநாதமாப்பாண முதலியார் கி.பி 1734 இல் தற்போதுள்ள இடத்தில் ஆலயத்தை அமைத்தார் என்பர். ஆதிக் கந்தசுவாமி கோவில் கட்டப்பட்ட ஆண்டு தொடர்பாக பார்க்கும் போது ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதியிலேயே மத சுதந்திரம் கொடுக்கப்பட்டெதன்ற காரணத்தாலே கி.பி. 1793 ஆம் ஆண்டிலேயே கோவில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள கந்தசுவாமி கோவிலின் தாபகர்களிலொருவனான கிருஷ்ணையர் சுப்பையர் ஆலயத்தின் பிரதம குருவாகத் தெரிவதனால் ஆலயக் கட்டியத்தில் அவர் பெயர் இடம் பெற முடியாது போயிற்று என்றும் அதனால் அந்தக் கௌரவம் இரகுநாத மாப்பாண முதலியாருக்குக் கிடைத்தது என்ற கருத்துமுண்டு.

தொன் ஜுவான் மாப்பாண முதலியாரும் இரகுநாத மாப்பாண முதலியாரும் ஒருவரெனக் கூறுவதும் இரகுநாத மாப்பாண முதலியார் மட்டுமே நல்லூர்க் கந்த சுவாமி கோவிலை நிறுவினார் எனக் கொள்வதும் பொருத்தமற்றவை என்ற வாதமும் இவ்வாலய வரலாற்றில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகசூரியனுக்குப் பின் அவன் மகன் சிங்கைப் பரராசசேகரன் எனும் நாமத்தோடு கி.பி 1478 ஆம் ஆண்டளவில் அரசனானான். இவன் தந்தையினும் சிறந்தவனாக நல்லூர் இராசதானிக்கு வடபாலில் சட்டநாதர் கோயிலையும் குடபாலில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும் தென்பாலில் கைலாயநாதர் ஆலயத்தையும் குடதிசையில் வீரமாகாளி அம்மன் ஆலயத்தையும் கட்டுவித் துத் தன் தலைநகரை முன்னிலையிலும் அணி பெற விளங்க வைத்தான்.

கந்தசுவாமி கோயிலுக்கண்மையிற் 'ப' கர வடிவினதாக ஓர் ஏரி அமைப்பித்து யமுனா நதியின் திவ்ய தீர்த்தத்தைக் காவடிகளில் பெய்வித்து அதனை யமுனை ஏரி (யமுனாரி) எனப் பெயர் தந்தழைத்தான். இந்த முப்புடைக் கூபம் இப்பொழுது நல்லூர்க் கிறிஸ்தவ தேவாலயத்துக்கண்மையில் உள்ளது. இதுவே தீர்த்தக் கேணியாக உபயோகிக்கப்பட்ட தென கருதப்படுகின்றது.

கொழும்பிலிருந்த போர்த்துக்கேய தேசாதிபதி கொன்ஸ்தன்தீனு தெசா என்பவன் பிலிப் தெ ஒலிவெறா எனும் வீரசூரத் தளபதியை யாழ்ப்பாணத்துக் கனுப் பினான். இவன் யாழ்ப்பாணத்தரசனைக் சிறைப்படுத்தி 1621 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நல்லூரைத் தனது உறை விட மாக்கினான். இவன் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலைத் தரை மட்ட மாக்கி அது இருந்த இடமுந் தெரியாமல் அத்திவாரத்தையும் கிளறி விடும் படி கட்டளையிட்டான்.

நல்லூர்க் கந்தசாமி கோயிலை இழக்குமுன் அதன் மெய்காப் பாளனாயிருந்த சங்கிலி என்னும் சைவ பண்டாரம் அக்கோயிலின் விதானங்கள்வரையப்பட்டிருந்த செப்புக் சாசனங்களையும் திருவாபரணங்களையும் கொண்டு மட்டக் களப்புக்கு ஓடினான். அங்கிருந்த சிவன் விக்கிரகங்களை எல்லாம் அக் கோயிற் குருக்கள் மார் பூதராயர் கோயிலுக்குச்சமீபத்திலுள்ள குளத்தில் புதைத்து விட்டு நீர்வேலிப் பகுதிக்கு ஓடினார்.

பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயத்தை திறமையாக நிருவகித்த பெருமை ஸ்ரீமான் ஷண்முகதாஸ் மாப்பாண முதலியாருக் குரியது. இவருடைய காலத் தில் ஆலயத் தில் நடைபெற்ற திருத்தலங்கள் பல. பழனியாண்டவர் கோயிலுக்கு முன்புள்ள ஷண்முக தீர்த்தத்தைத் திருத்தி நான்கு பக்கமும் விசாலமான மண்டபம் அமைத் தமை, கைலாச வாகனம் செய்வித் தமை என பல திருப்பணிகள் புரியப்பட்டன. கோயிற் பூசைகளையும் உற்சவகளை யும் குறித்த நேரத்துக்குச் செய்வித்தல் ஆதியனவும் சீரிய முறைகளை இவர் கையாண்டு வந்தார். இவர் தகுதியான வேதியர்களை நியமித்து கோயிற் பணிகளைப் புரிந்து வந்தார். தமது காரியாலயத் திலிருந்த வண்ணமே சகல வேலைகளையும் கண் காணித்து வருவார்.

1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதியன்று அறங் காவலர் பதவியேற்ற குக ஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களும் கோயில் திருப்பணிகளில் தம் முழுக் கவனத்தையுஞ் செலுத்தி வருகிறார்கள். 1965 இல் பழைய வசந்தமண்டபம் இருந்த இடத்தில் விசாலமான புதிய மண்டபத்தை நிர்மாணித்தார். கோயிற்றிருப் பணிகளைச் செவ்வனவே நிறை வேற்றி வருவதிலும் நித்திய நைமித்தியங்கள் காலம் தவறாது நடைபெறச் செய்வதிலும் விழிப்புடனிருந்து தொண்டாற்றி வருகிறார். பல்வேறு ஆலயத் திருப்பணிகளுடன் காலத்துக்குக் காலம் புது மெருகுடன் நடைபெற்று வருகின்றன. நான்கு திசைக ளிலும் கோபுரங்கள் எழுப்பு வத ற்கு திட்டமிட்டு தெற்கு வடக்குக் கோபுர ங்கள் நிறை வடைந்துள்ளன. மேற்கு கோபுரமும் அமை க்கப் படவுள்ளது. வட பாலிருக் கும் ஆலயங்களுள் நேர காலம் தவறாது நிர்வகிக்கப் படுவதும் தனி ஒரு வரின் முகா மையின் கீழ் செயற்படுவதும் இவ்வாலய மேயாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தர் வேடங்கொண்ட சித்தர்



கொழும்புத்துறை ஆச்சிரமம்

**வை**த்தீஸ்வரன் கோயிற் சந்தி இற்றைக்கு ஐம்பத்தேழு வருடங்களுக்கு முன், 1971ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவனாயிருந்த காலம். அன்றொருநாள் கல்லூரி விடுதியிலிருந்து நானும் பல மாணவர்களும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகாமையில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு ஒருவர் பின் ஒருவராகச் சென்று கொண்டிருந்தோம். சண்முகநாதன் புத்தக சாலைக்கும் வைத்தீஸ்வரன் கோயிலுக்குமிடையில் உள்ள தெருச் சந்தியில் ஒரு அபூர்வமான மனிதன் நிற்கக் கண்டோம். அவர் வழிப்போக்கர்களைப் பார்த்துக்கொண்டும் இடையிடையே அங்குமிங்கும் நடந்து கொண்டுமிருந்தார். கம்பீரமான தோற்றம். மடித்துச் சண்டிக்கட்டாக கட்டிய மங்கல் நிறமான வேட்டி மெல்லிய வெள்ளிக்கம்பிகள் போன்ற தலைமயிர். ஆவேசத்தைப் பிரதிபலிக்கும் பார்வை மிடுக்கான நடை, இப்படி நூதனமான ஒரு மனிதனைக் கண்டால் பள்ளி மாணவர்கள் இயல்பாக என்ன செய்வார்கள். நாங்கள் சந்தியில் சற்று நேரம் நின்று அவரை உற்றுப்பார்த்தோம்.

என்னடா பார்க்கிறீர்கள் என்று உரத்துச் சத்தம் போட்டுக்கொண்டு குனிந்து ஒரு கல்லையெடுத்தார். ஒரு நொடிக்குள் திக்கு திசை தெரியாது சிதறுண்டு கலைந்து ஓடி ஒழிந்து கொண்டோம் நாங்கள். அவரை மூர்க்கமான ஒரு பைத்தியக்காரன் என்று முடிவுகட்டிக் கொண்டோம். அடுத்தடுத்த நாட்களில் அவ் வழியாகச் செல்லும் போது மிக ஜாக்கிரதையுடன் மேலே குறிப்பிட்ட சந்தி வந்ததும் துரிதமாக நடந்து செல்வது எங்கள் வழக்கமாய் விட்டது. இருந்தும் கடைக்கண்ணால் சந்திப்பக்கம் பார்க்காமல் போக முடிவதில்லை.

சில நாட்களில் அந்தப் பைத்தியம் அதே சந்தியில் எங்களைக் கண்டும் காணாதது போல் நிற்கும். மறு நாட்களில் அது சண்முகநாதன் புத்தகசாலைக்குள் ஒரு நாற்காலியில் சாந்தமாக அமர்ந்திருக்கும். இப்படியான ஒரு பைத்தியத்தை புத்தகசாலைக்குள் வரவழைத்து ஆசனம் கொடுத்து மரியாதை செய்தது விந்தையாக இருந்தது. அதன் மர்மம் எங்களுக்கு அப்போது புரியவில்லை. பல ஆண்டுகளுக்குப்பின்தான் அந்த வினோத மனிதன் ஒரு துறவியென்பதும் துறவை நாடும் மகான்கள் தங்கள் ஆரம்ப நிலையில் உலகம் தம்மை யணுகி தொந்தரவு செய்யாது தடுக்கக் கையாளும் உபாயங்களிலொன்றே பைத்தியக் கோலம் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். இந்த உணர்ச்சி மனதில் எழும்வரை சிவன் கோவிற் சந்தியில் மாணவர்களை வெருட்டுபவரின் பயங்கரத் தோற்றத்தை நினைக்குந் தோறும் என் மனதில் பயம் குடி கொண்டிருந்தது. கூடியவரை அவரை தூரத்தில் வைத்துக்கொண்டேன். ஆயினும் அவரை முதன்முதல் கண்ட பைத்தியக் கோலம் என் மனத்தைவிட்டு ஒருபோதும் அகலவில்லை. என்றும் எம்மை விட்டு நீங்காத அடிமைத் தொண்டு பூண்ட சுந்தரமூர்த்திநாயனாரும் தன்னை தடுத்தாட்கொள்ள பிராமணனாக வந்த முழுமுதலை ஒரு பித்தன் என்று தான் முதலில் மதித்தார்.

யாழ்ப்பாணத்தில் யோக சுவாமிகளை எப்போதாயினும் சந்தித்திருக்கிறீரா? நான் நேர்முகமாகச் சந்திக்கவில்லை. ஆனால் அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். யான் யாழ் இந்துக்கல்லூரியில் படிக்கும் போது ஒருநாள் சிவன் கோவில் சந்தியில் அவரைக் கண்டு ஒளித்தோடியது என் ஞாபகத்திலிருக்கிறது. அவர் ஒரு பைத்தியக் காரன் என்று நான் நினைத்துவிட்டேன். ஆனால் பின்னர் அவரைப் பலர் ஒரு வழியாக மதித்து வழிபடுகிறார்கள் எனவும் கேள்விப்பட்டேன். சில நேரங்களில் கோபாவேசங் கொண்டு ஆட்களைக் கண்டபடி வெருட்டிக் கலைக்கிறார் எனவும் அறிந்தேன்.

நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் அது முன்னொரு காலம். இப்போது அவர் ஒப்பற்ற ஒரு யோகி எனவும் தெய்வமெனவும் எல்லோராலும் வழிபடப்படுகிறார். ஒரு தவ சிரேஸ்டர். நான் பலமுறை அவரைத் தரிசித்திருக்கிறேன். நீரும் கட்டாயம் அவரைத் தரிசிக்க வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு நீர் சொல்லும் போது நான் மறுப்பதற்கில்லை. நீர் சொல்வது போல பலராலும் போற்றப்படுபவரில் ஏதோ மர்மம் இருக்கத்தானே வேண்டும். நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நேர்முகமாகச் சந்திப்பதால் என்ன நட்டம் வந்து விடப்போகிறது. நான் நாளைக்கே புறப்பட்டு விடுகிறேன். யாழ்ப்பாணஞ் சென்று யோக சுவாமிகளைத் தரிசித்து வருகிறேன். இந்தச் சம்பாஷ னைக்கு பின்னர் இருவரும் உல் லாசமாக முன்னொரு பொழுதும் அனுபவியாத மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

**அற்புதமான முதல் தரிசனம்**

யாழ்ப்பாணம் சேர்ந்த அன்று மாலையே கொழும்புத் துறைக்குப் புறப்பட்டேன். ஒருவருக்கும் எனது நோக்கம் தெரியாது. நான் பிரயாணம் செய்த ..... காரக்காரனுக்கு கொழும்புத்துறைச் சாமியார் இருக்கும் கொட்டிலை காட்டும்படி சொல்லியிருந்தேன். யோக சுவாமிகள் காலையில் மாத்திரம் தன் கொட்டிலில் இருப்பதாகவும் மறுநேரங்களில் பெரும்பாலும் பல இடங்களுக்கு சுற்றித் திரிவதாகவும் கேள்விப்பட்டிருந்தேன். எனவே பிறரொருவருடன் கூடிச் செல்லாது தனியே சென்று சுவாமிகளைக் காணவேண்டும் என்ற எண்ணம் என் மனதில் குடிகொண்டிருந்தது. முதற்கண் அவரின் ஆச்சிரமம் இருக்கும் இடத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டதால், அன்று மாலை கொழும்புத்துறைக்கு போய் சுவாமிகள் இருப்பிடத்தை முதலில் பார்த்து வைத்திருந்து மறுநாள் வைகறையில் அங்கு சென்று தவருது அவரைத் தரிசிக்கத் திட்டமிட்டுக் கொண்டேன்.

மறுநாள் காலை நான்கு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து இயன்றளவு உள்ளும் புறமும் தூய்மையாகப் புறப்பட்டேன். முன் செய்திருந்த ஒழுங்கின் படி கார் நான்கரை மணிக்கு வந்தது. நான் அப்போது வாழ்ந்த இடம் கட்டுடையில் உள்ள எனது மனைவியின் இல்லம். அவ்வளவு அதிகாலையில் எங்கே போகின்றேன் என்பதை என் மனைவிக்கும் சொல்லவில்லை. இரண்டு பைக்கற் கற்புரமும் ஒரு தீக்குச்சிப்பெட்டியும் மாத்திரம் என் சட்டைப்பையிலிருந்தது. என்ன நடக்கப் போகிறதோ சுவாமிகளைச் சந்திப்பேனா! வா என்று ஏற்றுக்கொள்வாரோ! அல்லது வெருட்டிக் கலைத்து விடுவாரோ! இவ்வாறு எண்ண அலைகள் என் மனத்தைக் குடையத் தொடங்கின. மனதை அமைதிப்படுத்திக் கொள்ள இயன்றவரை முயற்சித்தேன். மனம் முற்றாக அமைதி பெறமுன் கார் கொழும்புத்துறையை அடைந்துவிட்டது. மிக மெதுவாக ஓட்டி யாதொரு சத்தமுமில்லாமல் சுவாமிகளின் கொட்டில் படலையடியில் நிறுத்து எனச் சாரதிக்கு சொல்லியிருந்தேன். அப்படியே சென்று கார் நின்றது. படலை சாத்தியபடி இருந்தது. கொட்டிலுக்குள்ளிருந்து ஓர் உரத்த சத்தம் வைரமுத்து என்று என் பெயரை சொல்லி அழைத்தது. ஓம் சுவாமி என்று தடதடத்த குரலில் பதிலளித்தேன். என்ன ஆச்சரியம்! முன்பின் தெரியாத என்னை இந்தக் கார் இருளில் கொட்டிலினுள் மறைந்திருந்து கொண்டே பெயர் சொல்லி அழைக்கின்றாரே!! என்ற எண்ணம் எனக்குத் திடீர் அதிர்ச்சியைத் தந்தது. படலை திறந்திருக்கு வா என்று உத்தரவு பிறந்தது. நான் மெதுவாக கொட்டிலை நோக்கிச் சென்றேன். கதவு நிலையில் தலையை மோதிக் கொள்ளாதே: குனிந்து உள்ளே வா. மௌனமாகவும் யாக்கிரதையாக வும் உள்ளே புகுந்தேன். கற்பூரத்தை நிலத்தில் வைத்துக் கொளுத்தாதே: பக்கச்சுவரில் ஒரு கற்புரத்தட்டு இருக்கிறது. எடுத்துக் கீழே வைத்துக் கொளுத்து என்றார் சுவாமிகள். இந்த வாரத்தை, முன் என் மனதிலிருந்த அதிசயத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. என்னுடைய சட்டைப்பையினுள் கற்பூரம் இருப்பது இவருக்கு எப்படித்தெரியும் என்று ஆச்சரியப் பட்டேன். நான் கற்பூரத்தைக் கொளுத்தியவுடன் இரு கால்முகம் கழுவிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு வெளியே சென்றார் சுவாமிகள்.

கற்பூர வெளிச்சத்தில் அறையைச் சுற்றிப் பார்த்தேன். அவருடைய படுக்கை வெறும் பாய். ஒரு மெல்லிய தலையணை. அறையைச் சுற்றியிருந்த அறைச் சுவரில் இரண்டொரு சிறு புத்தகங்கள். கிடுகால் வேயப்பட்ட கூரை. சாணியால் மெழுகப்பட்ட தரை.படுக்கையின் தலைமாட்டில் ஒரு சிரட்டை. சகல உலகும் வந்து தன் தாளில் வீழ்ந்து வழிபடும் வெற்றியையுடைய இப்பெரியவரின் வாழ்க்கை வசதிகள் இவ்வளவு




தானா என்ற ...... விசாரமெழுந்தது என் மனதில். சுவாமி திரும்பிவரச் சென்ற சில நிமிடங்களில் எனது மனதில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல எண்ணங்கள் உதயமாயின. முன்னிருந்த ஐயப்பாடுகளும் விபரதங்களும் மெல்ல மெல்ல என்னை அறியாமலே மறைந்து விட்டன. ஒருவித பயம் மாத்திரம் நீங்கவில்லை. எனக்கு சுவாமி என்ன சொல்லப்போகிருரோ என்ற பயம். மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அமைதியாக இருந்தேன். இந்த அச்ச நிலையிலிருந்து இவ்வளவு காலமும் நான் கற்றதும் கேட்டதும் இவ்வளவு காலமும் நான் சமய வாழ்க்கையில் சாதிக்க எத்தனித்த அத்தனையும் வெறும் போலி என்பதும் என்னுள்ளே ஒன்றிலேனும் ஒரு திடமான நம்பிக்கை ஏற்படவில்லை யென்பதும் வெளிப்படையாய் உணர்ந்தேன்.

இதுவே எனது முதற்தரிசன அழைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலால் வினை முடிப்பாய் இக்கணமே

நல்லைப் பதி வாழும் ஞானத் தமிழ்த் தலைவா
தில்லைக்கிறை தந்த செல்வா! எம் சிந்தையெலாம்
அல்லல்படுவ தறிந்திலையோ! அப்பா! நீ
எல்லையில்லாக் கருணை மழை பொழிந்தருள்க!

ஈனர் கொடுஞ் செயலை இல்லையெனச் செய்த
ஞானத் தனிச்சுடரே! நல்லூரா! நீ
மோனத் தவச் செல்வர் செல்லப்பர், யோகர் எனும்
காணற்கரிய பிறவிகளின் கடவுளப்பா!

சிந்தை மகிழச் சினந்தணியக் கருணைபுரி
மைந்த குகனே! வடிவேலா! வரந்தருவாய்! எமது
முந்தை வினை களைந்து முழுதுந் நலந்தருக!
கந்தனிறையே கருத்தில் எமைக்காப்பாய்!

ஞாலமெலாம் நினைந்துருகி நாளும் உன் திருவடியை
நீ நினைக்கும் நிலை வேண்டும்! நல்லூரா!
கோலக் குறத்தி மணவாளா கொள்கையினாய்!
காலமெல்லாம் எம்மினத்தைக் கார்!

பட்டதுயர் விட்டொழியப் பார்க்கும் பராபரனே!
இட்டமுடன் தேரேறி எழுந்தருளும் ஆறுமுகா! உன்
கட்டளைக்காய் எப்பொழுதும் காத்திருக்கும்
மெய்யடியார் முட்டறுக்க முன்வருவாய் முந்தி

நைந்துருகும் மெய்யடியார் நாளும் உன் திருச் செவியில்
சந்தமுடன் ஓதும் தமிழ் கேட்டு மகிழ்ந்தவனே! முன்பு
வந்து இடரும்இனிவருமிடரும் உணர்வோனே!
முந்தி வந்து வேலால் வினை முடிப்பாய் இக்கணமே

**பேராசிரியர் க.நாகேஸ்வரன்** M.A.Phd

# வேலை வணங்குவது வேலை

நீண்ட காலம் ஈழத்தமிழர்கள் அநீதிப் படைகளைக் கண்டும் மிரண்டும் தலை தெறிக்கப் பயந்து உயிரைக் கையிலே பிடித்த வண்ணம் ஓடினார்கள். இன்றும் ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள் என்பது பேருண் மை. அப்படியென்றால் அதன் பொருள் விளக்க மென்ன என்று தானே மூக்கில் விரலை வைக்கிறீர்கள். கூறுகி றேன் பக்தர்களே!

" அஞ்சி யஞ்சிச் சாவார் இவரஞ்சாத பொருளி ல்லை அவனியிலே' என்று பாடினான் பாரதி. எனினும் தமிழரது முருகபக்தி ஒன்று "அஞ்சு தலை நீக்கி ஆறு தலை தருவது நல்லைக் கந்தனது வேலே" என்பது தான் முடிந்த முடிவு. " யாமிருக்கப் பயமேன்" என்பது தான் உட் பொருள். யோக சுவாமிகள் அருளிய வரிகள் இவை..

**பஞ்சம் படை வந்தாலும்**
**பாரெல்லாம் வெந்தாலும்**
**அஞ்சுவமோ நாங்க ளெடி- கிளியே**
**ஆறுமுகன் தஞ்ச மெடி**

என்பது பாடல்.

கவிஞர் சோ. பத்மநான் நல்லையின் மகிமை குறித்துப் பாடும் பொழுது " வீதி யெங்கும் வெண்மணற்பரப்பு " என்று நல் லூரானின் திரு வீதியைக் குறிப்பிடுகிறார்.

மேலும்,காவடிகளோடு கூட்டம் அதனைக் காண விழையும் பிறிதோர் கூட்டம் பாவலர் கள் நாவலர்கள் பண்ணிசை விற்பன்னர் களும் முழங்கும் வந்து நெருங்கும் என்று நல்லைக் கந்தன் விழாவின் அம்சங்களை ஆக்கியுரைக் கின்றார். நல்லூரிலே விழா வென்றால் யாழ்ப் பாணம் மிகப் புனிதமாகி விடும். காலாதிகால மாக நம்பிக்கையி லுண் டான முருக பக்தி நல்லூரின் விழாக்களின் போது உன்னதமாகி உணர்வு பூர்வமாகவே அலை பாய்வது. திருத்தேர் விழா யாழ்ப்பாணச் சமூகத்தின் சமு தாய விழாவது. மிகவும் உறுதியாகவே செம் பிற் களி ம்பு போன்று உறுதிபட நிற்பது சாதி என்னும் சழக்கு. இதன் பெறுமானமே வேர றுந்த நிலையிலே "மனித சாதி"., "முருகசாதி" எனும் உயர்நிலையிலே தேர் வடத்திலே காணும் நன்னாள் நல்லைக் கந்தனது தேர்த் திருவிழா வேயாகும். ஆவுரித்துத் தின்றுழலும் புலை யரே னும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்பது அப்பர் திருத் தாண்டகம். இதன் தாற்பரியமே நல்லைக் கந்தன் தேர். இதற்குள்ளும் ஒரு விரத மகிமை. அது வெதுவெனில் "அஞ்சாமை வேண்டும்" என்கிற குறிக் கோளாகும். அஞ்சுதலை நீக்கி ஆறுத லைத் தருபவன் நல்லைக்கந்தன். "ஆறுதல் தருவாய் ஆறுமுகா உலகில் வேறு துணை யில்லை வேல் முருகா" என்று அடியவர்கள் குமுறிக் குளறி வேண்டுதல் புரிகிறார்கள்.

வேலை வணங்குவதே வேலை" முருகன் வாழ்வதால் தமிழர் வாழ்வார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருச்செந்தூர் என்றாலே கடற்கரையும் கோலக்குமரனின் கோபுர அழகும் தான் நம்மை நிமிர்ந்து பார்க்க வைக்கும். செந்தில் ஆண்டவன் அழகன். கேட்டதெல்லாம் பாலித்து அருளும் அருளாளன். செந்தூரிலிருந்து தான் சூரனை சம்ஹாரம் பண்ணப் புறப்பட்டான். இங்கு அமர்ந்து தான் சூரனைப்பற்றிய விபரங்கள் எல்லாம் குருபகவானான பிரகஸ்பதி வாயிலாக கேட்டறிந்தான். அருளாளன் என்ற பெயருக்கேற்ப சூரனை இரு கூறாக்கி சேவல் கொடியாக்கி மயிலை வாகனமாக ஏற்றுக்கொண்ட பெருந்தகையாளன். பகழிக் கூத்தர் இராமநாதபுரத்தில் திவானாக இருந்தவர். இவருடைய தீராத வயிற்றுவலியை செந்தில் ஆண்டவன் தீர்த்து வைத்தான். அதற்கு நன்றிக்கடனாக பகழிக் கூத்தர் திருச்செந்தில் ஆண்டவன் மீது திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் பாடினார்.

அரங்கேற்றம் நடந்தது. இவரோ பெரிய சமஸ்தானத்து வித்துவான். இவருக்கு என்ன மரியாதை செய்ய முடியும்? என்று பேசாமல் இருந்து விட்டனர் ஆலயத்தினர். கந்தன் பேசாமல் இருப்பானா? பகழிக்கூத்தர் இரவில் உறங்கும் பொழுது தன் கழுத்துச் சங்கிலியை கழற்றி அவர் கழுத்தில் போட்டுவிட்டு போய்விட்டான். பிள்ளைத் தமிழுக்கு மயங்கிய பேரருளாளன் அவன். மறுநாள் காலை ஆண்டவன் கழுத்துச் சங்கிலியைக் காணோம் என்று ஆலயம் திறந்த அர்ச்சகர் அலறித்துடிக்க

பகழிக் கூத்தரோ கந்தன் கழுத்துச் சங்கிலி பன்னீரும் சந்தனமும் மணக்க தன் கழுத்தில் எப்படி விழுந்து கிடக்கிறது. தாம் ஆலயத்திலிருந்து வரும்போது அனைவரும் தானே வந்தார்கள்? இது எப்படி சாத்தியம்? தாம் திருட்டுப்பட்டம் சுமக்க வேண்டி வருமோ? என்று அச்சப்பட்டார்.

ஆண்டவன் அரச்சகர் மூலம்தான் அவருக்குப் பிள்ளைத் தமிழின் சொற்சுவையைக்கேட்டு மகிழ்ந்து மரியாதை செய்தோம் என்று அருள்வாக்கு சொல்ல ஆலயத்தினர் தங்கள் தவறை குமரப் பெருமான் சுட்டிக்காட்டியதை உணர்ந்து பகழிக் கூத்தரை அழைத்து ஆலய மரியாதை செய்து சிறப்பித்தனர்.

தமிழ்க்குமரன் முருகப்பெருமான் என்பது இதிலிருந்து விளங்கும். முத்தமிழுக்கும் இவனே முதல்வன். இவன் நாதப் பிரியன் என்று அருணகிரிநாதப்பெருமான் பழநித் திருப்புகழில்

நாவின்ப ரசம தான ஆனந்த அருவிபாய
நாதங்களொடு குலாவி விளையாட

என்கிறார்.

நாதாந்த நாயகனின் மகன் நாதங்களோடு குலாவி விளையாடுவதில் விந்தை ஒன்றும் இல்லை. இதற்கு ஒரு சம்பவத்தை திருச்செந்தூரின் அற்புதமாகவே காணலாம். பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. திருச்செந்தூரில் ஆலயத்திற்கு அருகில் ஒரு கல்யாண மண்டபம் இருந்தது. பழைய மண்டபம் அது. அதன் விஸ்தாரமான ஹோலில் முருக பக்தர்கள் தினமும் மாலையில் கூடி முருகனைப் பற்றிய ஸ்தோத்திரப் பாடல்களை பாடுவார்கள். அதில் பாம்பன் ஸ்வாமிகளின் பஞ்சாமிர்த வண்ணமும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருப்புகழைப்போல சந்தத் தமிழன் சொற்சுவையும் பொருட் சுவையும் தமிழின் அழகைக் கொண்டது.


இக்கூட்டத்தை ஒருங்கிணைந்து நடத்துபவர்கள் சுப்பையர் என்பவரும் அனந்த சுப்ரமணியம் என்பவரும் ஆவார்கள். திருச்செந்தூரிலே பிறந்து வளர்ந்து முருக பக்தையாக இருப்பவர் முத்தம்மா என்னும் மூதாட்டி அதிகாலை முருகனின் விஸ்வரூபத்தை தவறவிடாமல் தரிசிப்பவர் தினமும் கந்தனின்

**(7ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில் திருநீறு அணியக்கூடிய 18 இடங்கள்



1) தலை நடுவில் (உச்சி)
2) நெற்றி
3) மார்பு
4)தொப்புளுக்கு(கொப்புழ்) சற்று மேல்.
5) இடது தோள்
6) வலது தோள்
7) இடது கையின் நடுவில்
8) வலது கையின் நடுவில்
9) இடது மணிக்கட்டு
10) வலது மணிக்கட்டு
11) இடது இடுப்பு
12) வலது இடுப்பு
13) இடது கால் நடுவில்
14) வலது கால் நடுவில்
15) முதுகுக்குக் கீழ்
16) கழுத்து
17) வலது காதில் ஒரு பொட்டு
18) இடது காதில் ஒரு பொட்டு

பலன்கள்: திருநீறு அணிவதால் தடையற்ற இறைச் சிந்தனை, உயர்ந்த நற்குணங்கள், குறைவற்ற செல்வம், நல் வாக்கு, நல்லோர் நட்பு, போன்ற எல்லா நலமும் பெற்று சிறப்புடன் வாழலாம். உடல் நலனும் இரத்த ஓட்டமும் சீர்படும். பாவங்கள் என வரையறுக்கப் பட்டவைகளை ஒதுக்கும் மனப் பாங்கும், தொல்லைகள் அனைத்தை யும் அழித்தும் அனைத்துப் பேறுகளையும் அளித்துப் பிறவிப் பிணி அறுத்து மோட்சம் செல்ல வழிகாட்டும். இதைத்தான் திருமூலர் பின்வரும் பாடலில் தெரிவிக்கிறார்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

# பகழிக் கூத்தருக்குப்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களைக் காதார் கேட்டு மகிழ்பவர். இந்தப் பக்தர்கள் பாடல்களைப்பாடுவார்களே தவிர ராக ஸ்வர ஞானத்தோடு பாடுபவர்கள் இல்லை.

ஒருநாள் முத்தம்மா இக்கூட்டத்தில் இருந்த சமயம் பேரெழில் கொண்ட ஒரு இளைஞன் கையில் பளபளத்த செம்பு ஒன்றை ஏந்தியபடி நின்றிருப்பதை அவதானித்தார். ஆலயத்திற்கு பால் கொண்டு செல்பவன் என்று எண்ணினாரோ என்னவோ? அந்த இளைஞன் தொடர்ந்து சில தினங்களாகவே வந்து கொண்டிருந்தான்.

முத்தம்மையும் இவன் யார் வீட்டுப்பையன் ? இவனுடைய வீடு எது? என்று குழம்பியவாறு திரும்பத்திரும்ப சிந்தித்தும் விடை கிடைக்கவில்லை. ஒருநாள் அதிகாலை தரிசனத்திற்காக முத்தம்மை தயாராகிக்கொண்டி ருந்தார். கதவு தட்டப்பட்டது. இந்த நேரத்தில் யாரென்று எண்ணி யாராவது தன்னுடன் கோயிலுக்கு வருபவர்களாக இருக்குமோ என்று ஐயத்துடன் கதவைத்திறந்தார். எதிரே சில தினங்களாக தன் சித்தத்தை கவர்ந்த அந்த அழகிய இளைஞன் இதழ் கொள்ளாத சிரிப்புடன் நின்றான்.

என்ன பாட்டி கோயிலுக்குத்தானே? என்றவுடன் இந்த நேரத்தில் போகலாமா என்ற அச்சம் துளியும் இன்றி நடந்தார் முத்தம்மா. பயந்த தனி வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே என்று கந்தரலங்காரப் பாடலைக்கேட்ட பாட்டிக்கா பயம்?

ஆனால் பாட்டியை எதுவும் கேட்க இயலாத மாயை சூழ்ந்திருந்தது. இவன் யாரென்ற கேள்வி மனத்தினுள் அடங்கினாலும் உடன் வரும் ஞான பண்டிதனுக்கு தெரியாதா? ஆலயத்திற்கு சற்று தூரத்தில் நின்றவன் பாட்டி நான் யார்? என் வீடு எதுனுதானே உனக்கு சந்தேகம்? தினமும் என் வீட்டுக்கு வந்துமா என் வீடு தெரியவில்லை. அதோ பார். அதுதான் என் வீடு என்று திருச்செந்தூர் கோயிலைச் சுட்டிக்காட்டினார். பாட்டி கோபுரத்தை பார்த்துவிட்டு அவனையே வெறித்தாள். இது செந்திலாண்டவன் கோயில் அல்லவா? மீண்டும் அவனையே வெறித்தாள்.

பாட்டி தினமும் பாட்டு கேட்க மண்டபத்திற்கு வருகிறேன். ஆளுக்கு ஆள் ஒவ்வொரு சுருதியில் பாடறுங்க. ஒரே மாதிரி ராகம் போட்டு பாடினா எனக்குப் பிடிக்கும். என்றவனைப்பார்த்த முத்தம்மை ஆலயத்தைப்பார்த்தாள்.


அருகிலிருந்த இளைஞனைப்பார்க்க அவன் அங்கே இல்லை. வந்தவன் அடியார்கள் சித்தத்தையே வீடாக கொண்ட ஆறுமுக வள்ளல் என்பதைப் புரிந்து கொண்டவளால் கதறி கண்ணீர்விடத்தான் முடிந்தது.

அன்றிலிருந்து பாடல்களையும் திருப்புகழையும் பஞ்சாமிர்த வண்ணத்தையும் ராகத்தோடு பாட ஆரம்பித்தார்கள். நாதம் மீட்டும் இடத்தில் சண்முக நாதன் நிச்சயம் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகருக்கு கொழுக்கட்டை படைப்பது ஏன்?



பூரணம் எனபது நிறைவானது என்ற பொருளாகும். வெள்ளையான மாவுப்பகுதி தூய மனமாகும். அதில் நிறைந்துள்ள தேங்காய்த் துருவல் பூரணம், மனம் முழுவதும் நிறைந்துள்ள தூய பக்தியை குறிக்கிறது.

விநாயகருக்கு மிகவும் விருப்பமானது கொழுக்கட்டை. இதில்வைக்கப்படுகிற பூரணம்-தேங்காய்த்துருவல், வெல்லம், எள், ஏலக்காய் முதலிய சுவை மிக்க பொருள் ளின் கலவையாகும். பூரணம் எனபது நிறைவானது என்ற பொருளாகும். வெள்ளையான மாவுப்பகுதி தூய மனமாகும்.அதில் நிறைந்துள்ள தேங்காய்த் துருவல் பூரணம், மனம் முழுவதும் நிறைந்துள்ள தூய பக்தியை குறிக்கிறது. இதுதான் கொழுக்கட்டையின் தத்துவம் ஆகும். அதாவது மனம் நிறைந்த பக்தியுடன் இறை வனைத் தொழுவதே மிகச் சிறந்த வழிபாட்டு . இதைக் கொழுக்கட்டை தெரிவிக்கிறது. தேங்காய் பூரணமாகிறது விநாயகருக்கு உகந்ததாகிறது. கொழுக்கட்டையின் கூர்மையான முன் பகுதி, விநாயகர் கூரிய புத்தியை அருள்வார் என்பதைத் தெரிவிக்கிறது. கொழுக்கட்டை யின் வெள்ளை நிற வெளிப்பகுதி, எல்லோருக்கும் தெளிவான உள்ளம் தருவார் என்பதைத் தெரிவிக் கிறது. கொழுக்கட்டையின் உட்புறத் தில் இனிப்பான பகுதியோ, கணபதி எப்போதும் இனிய அருள் வழங்குவா என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

# ஏன் வடக்கு திசையில் தலை வைத்து படுக்கக் கூடாது

உலகம் அறிந்தது அறிவியல் நமக்கு இந்து மத பொக்கிஷம் பூமியானது சூரியனிடமிருந்து வெளிவரும் சக்தி மூலம் காந்த சக்தியை அடைகிறது. பூமி மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றும்போது,அதனால் உண்டாகின்ற மின்சார சக்தியானது,பூமியில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கிறது.அந்த சக்தி செல்லும் திசைக்கு வடக்கில் பூமியின் வடதுருவம் இருப்பதால் அது காந்தத்தின் வட துருவமாகிறது.இப்படி பூமியின் தென் துருவம் காந்தத்தின் தென் துருவமாகிறது. இதனால் ஒரு காந்தமாய் மாறுகிறது பூமி இதனை நீருபிக்க ஒரு காந்த ஊசியை தொங்கவிட்டால் அது வடக்கு - தெற்காக நிற்கும். இதை,இயற்பியல் மின்காந்த புலம், காந்த திசைகளின் ஈர்ப்பு மற்றும் எதிர்ப்புப் பற்றி விளக்குகின்றன. காந்த ஊசி வடக்கு தெற்காக நிற்பதற்க்குக் காரணம்,காந்தத்தின் வடக்கு பூமியின் தென் துருவத்தாலும்.தெற்கு பூமியின் வடக்கு துருவத்தினாலும் இழுக்கபடுதல். இதே தான் மனித உடலில் காந்த சக்தி உள்ளது உடலில் இரத்ததில் முக்கிய பாகம் இரும்பு சத்தாகும்.மேலும் பகலில் இருக்கும் போதும், நடக்கும்போதும் அடையும் காந்த சக்தி உடலின் பல பாகங்களிலும் பரந்து விளங்கும். தூங்கும் போது தெற்கே தலை வைத்து கொண்டால், நமது வடதுருவமும்,பூமியின் தென்துருவமும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு, உடலின் காந்த சக்தி கெடாமல் இருக்கும். ஆனால் வடக்கில் தலை வைத்துக் கொண்டால்,பூமியின் வட துருவம் நமது வடதுருவத்துடன் சேராது.ஒன்றையொன்று தாக்கி,தொடர்ச்சியாக உடலுக்கு காந்த சக்தியை அளிக்காது. உடலுடைய இயற்கையான நிலை மாறுபடும் எனவேதான்,வடக்குத் திசையில் தலை வைத்து தூங்கக் கூடாது. நம்ம முன்னோர்கள் சொல்வது பழைய பஞ்சாங்கம் என்று ஒதுக்கினால் பாதிக்கபடுவது நாம் தான். இது ஓலைச்சுவடி என்ற ஒரு நூலில் அழகாக விஞ்ஞான பூர்வமாக போட்டுள்ளனர். இது மட்டுமன்று நாம் அன்றாடம் செய்ய வேண்டியவை செய்ய கூடாதவைகள் அனைத்தும் அதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திர அஷ்டமத்தால் ஏற்படும் பாதிப்புகள் நீங்க...

ஸ்வேதாம்பரான் வித்தனும் வரஸுப்ரவர்ணம்
ஸ்வேதாஸ்வயுக்தரகம் ஸ்ரஸேவிதாங்க்ரிம்
தோர்ப்யாம் த்ருதாபயவரம்
வரதம் ஸுதாம்ஸும்
ஸ்ரீவத்ஸ மௌக்திக தரம் ப்ரணமாமி
நித்யம் சந்திர பகவான் துதி

வெண்மையான வஸ்திரம் தரித்தவரும் சிறந்த வெண்மை நிறமுடையவரும் வெள்ளைக் குதிரைகள் பூட்டிய தேரில் செல்பவரும் தேவர்களால் வணங்கப் பட்ட சரணங்களை உடையவரும் , இரண்டு கைகளி லும் அபயம், வரதம் என்ற முத்திரைகளைத் தரித்த வரும் வரங்களை அளிப்பவரும் அம்ருத கிரணத்தை யும் ஸ்ரீவட்ஸம் என்ற முத்துமாலையையும் தரித்தவருமான சந்திர பகவானை நமஸ்கரிக்கின்றோம்.

இத்துதியை சுமா சோமகவாரத் தினத்தன்றும் திங்கட்கிழமைகளிலும் சுஸ்ந்திர அஷ்டம தினங்களில் பாராயனம் செய்வதால் சந்திரபகவான் திருவருள் கிட்டும்.

# அறுபதாம் கல்யாணம் நடத்துவது ஏன்?



கணவருக்கு அறுபது வயது பூர்த்தியானதும் மீண்டும் மணவிழா நடத்தி இணைவதே அறுபதாம் கல்யாணம். இதை சஷ்டியப்தபூர்த்தி, மணிவிழா என்றும் குறிப்பிடுவர். இதற்கு ஒரு தத்துவப்பின்னணி உண்டு. உலகவாழ்வில் ஈடுபட்டிருக்கும் மனிதன் ஆசாபாசங்களை ஏற்று அனுபவிக்க வேண்டிய நிரப்பந்தத்தில் இருக்கிறான். அவனுடைய அறுபதாம் வயது வாழ்வின் திருப்புமுனையாக அமைகிறது. இளமையில் செய்த திருமணத்தின் அடிப்படையில் குடும்பத்தைப் பேணுதல், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குதல் போன்ற இல்லறக்கடமைகளை நிறைவேறுகின்றான். அதன்பின் பிள்ளைகள் மற்றும் உறவுகளையும், வாழ்வியல் இன்பங்களையும் சுதந்திரமாக விடுத்து, கடவுளை முழுமையாகச் சரணடைய வேண்டும். இந்த ஆன்மிகக் கடமையை நினைவுபடுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

# நல்வாழ்வு நிச்சயம் கிட்டும்

**கேள்வி**

**எனது மகள் அரச பதவியில் கண்ணியமாக உள்ளார். அவளது ஜாதகத்தில் நாகதோஷம், செய்வாய் தோஷம், மாங்கல்யதோஷம் உள்ளன என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர். அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

**பதில்**

உங்களது மகளின் பெயரை முத லெழுத்துக் களுடன் சேர்த்து ஆங்கிலத்தில் 360 முறை பேப்பரில் எழுதி சிவாலய குளத்தில் அல்லது முருகன் ஆலய குளத்தில் போடச் சொல்லுங்கள் . வெள்ளியில் நாகம் செய்து செவ்வாய்க்கிழமைகளில் . விரதமிருந்து பூஜை செய்து வரவும். 7 கிழமை பூசை செய்து முடிந்ததும் நயினாதீவு நாகபூசனி அம்மன் கோயிலுக்குச் சென்று அர்ச்சனைத் தட்டில் வெள்ளி நாகத்தை வைத்து சிவாச்சாரியாரிடம் ஒப்படைக்கவும். ஒன்பது சுமங்கலிகளுக்கும் மஞ்சள், குங்குமம், சிவப்பு நூல் வர்ணங்களில் நூல் தானமாக அவளது கையாலேயே கொடுக்கச் சொல்லுங்கள். திருமணப் பேச்சின் போது செய்வாய் தோஷம், சூரியதோஷம் உள்ள ஆண் ஜாதகங்களை ஜோதிடர் மூலம் கணித்து நிச்சயம் செய்து கொள்ளுங்கள். திருமணத்தை நாகம் குடை பிடித்து வீற்றிருக்கும் அம்மன் சந்திதியில் நடத்துங்கள். நல்வாழ்வு நிச்சயம் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதை வளர்த்த கிளி

அயோத்தி மாநகரில் சீதாபிராட்டி அழகிய கிளி ஒன்று வளர்த்து வந்தாள். அக்கிளியிடம் பிராட்டிக்கு மிக்க அன்பு உண்டு. அக்கிளிக்கு பெயர் சூட்ட வேண்டும் என்று ஆவல் கொண்டாள் மிதிலைச் செல்வி. சீதை எக்காரியத் தைச் செய்தாலும் தன் மருந்தனைய நாயகனின் ஆலோசனையைக் கேட்டே செய்வாள். எனவே கிளியின் பெயர் பற்றிய குழப்பத்தை இராமபிரானிடம் கூறினாள்.

சுவாமி நான் ஆசையோடு வளர்க் கும் என் கிளிக்கு பெயர் ஒன்று சூட்ட வேண்டும் என்று விரும்புகிறேன். எப்பெயர் வைப்பது என்பதிலேதான் எனக்கு குழப்பம் என்றாள் சீதாபிராட்டி.

ஐயன் புன்னகைத்து, சீதா இதிலே குழப்பத்திற்கு என்ன வேலை? எனது தாயாகிய கைகேயின் பெயரையே சூட்டிவிடு என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சீதாபிராட்டிக்கு வியப்பாக இருந் தது. தன் சொந்த அன்னை கோசலை யின் பெயரைச் சூட்டாமல் தந்தையின் பெயரைச் சூட்டாமல் தம்பியார் பெயரைச் சூட்டாமல் சிற்றன்னை யான கைகேயின் பெயரைக் கிளிக்கு சூட்டுகிறாரே என்று, தன் தாயைக் காட்டிலும் சுவாமிக்கு சிற்றன்னை யின் மீதிலுள்ள அன்புதான் எவ்வளவு என்று சிந்தித்தார் பிராட்டியார். நாயகன் கூறிய வாறே சீதாபிராட் டியும் கிளிக்கு கைகேயி என்ற பெயரையே வைத்து விட்டார். ஆனால் அப்போது அவர் அதுபற்றி நாயகனிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

கேட்டால் இராமபிரானுக்குத் தர்ம சங்கடமாக இருக்க கூடும் என்று நினைத்தாள். காரணம் பெற்ற அன்னையைவிடச் சிற்றன்னையுாா் பேரில் அதிக அன்பு பாராட்டுவதன் காரணம் என்ன? என்று கேட்டால் இராமபிரான் மறுமொழி கூறத்தயங்கக் கூடும். எனவே தன் ஊகங்களை அப்படியே மனதுக்குள் அடக்கிக் கொண்டார் பிராட்டியார்.

இருப்பினும் பிராட்டியாருக்கு இந்தச் சம்பவம் மறக்கவே இல்லை. கைகேயி தசரதனிடம் வரம் பெற்று இராமனைக் காட்டுக்கு அனுப்பும் போது சீதாபிராட்டியின் மனதில் இந்தச் சம்பவம் நெருடுகிறது. தம் நாயகன் விசேட அன்பு செலுத்திய கைகேயியே அவருடைய வனவாசத்துக்கு காரணமானார் என்ற போது பிராட்டி சிந்திக்கிறார்.

அதை வெளிப்படுத்த ஒரு வேளை வருகிறது. அந்த வேளை இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்டு சீதாப்பிராட்டியார் அசோக வனத்தில் இருக்கிறார்.

அப்போது அனுமன் இராம தூதுவனாக பிராட்டியாரை சந்திக்கிறான். அந்தச் சந்திப்பில் இராமபிரான் தெரிவித்த செய்திகளை தெரிந்து கொண்ட தாயார், தன் பங்குக்கு ஓர் அரிய செய்தியை ஸ்ரீராமனுக்கு தெரிவிக்க வேண்டுமே. அதற்காக யோசிக்கிறார் பிராட்டி. அப்போது பளிச்சென்று இந்தச் சம்பவம் தான் நினைவுக்கு வருகிறது.



அனுமானிடம் கிளிக்கு ஸ்ரீராமர் கைகேயின் பெயரிட்ட அந்தச் சம்பவத்தை பிராட்டியின் உள்ளத்தில் பசுமையாக இருந்த அந்த அந்தரங்க சம்பவத்தைக் கூறுகிறார். அதைக் கம்பன் இப்படிக் கூறுகிறான்.

**என்னொர் இன்னுயிர் மென் கிளிக்கி**
**யார் பெயர் ஈகேன்**
**மன்ன! என்றலும் மாசறு கேகயன்**
**மாதென்**
**அன்னை தன் பெயராகென அன்**
**பினெடந்நாள்**
**சொன்ன மெய்ம் மொழி சொல்லு**
**மெய்ம்மை தொடர்ந்தோய்!**

கம்ப இராமாயணம்

சீதாப்பிராட்டியார் கூறிய இந்தச் சம்பவத்தை கேட்டு அனுமனும் வியப்புறுகிறான்.

தன் சிற்றன்னையின் பேரிலுள்ள அன்புக்கும் மேலாக வேறு ஏதாவது காரணமும் கருதித்தான் அப்படி பெயர் சூட்டியிருப்பாரோ இராமபிரான்? அந்த யோசனை தோன்ற அனுமான் சீதாதேவியை நோக்குகிறார். அனுமான் சிந்தனையை உணர்ந்த சீதாபிராட்டி பொருட் செறிவுடன் மென்மையாக புன்னகைக்கிறார்.

அந்தப் புன்னகையிலிருந்தே அனுமானுக்கு பளிச்சென்று அந்தக் காரணம் புரிந்து விடுகிறது.

என்ன அந்தக்காரணம்?

கிளிக்கு ஒரு பழக்கம் உண்டு. அதற்குத் தானே பேசத் தெரியாது. யார் என்ன சொல்லிக் கொடுக்கிறார்களோ அதனை அப்படியே கூறும். அதாவது கிளி சொன்னதைச் சொல்லும். அவ்வளவுதான். அதுபோல கைகேயி தான் பெற்ற இரண்டு வரங்களைப் பயன்படுத்திக்கொண்டு இராமனை வனவாசம் செய்யச் சொல்கின்றாள்.

இது கைகேகியாக சொன்னது கிடையாது. அவளது மூளையில் அத்தீய கருத்து உதயமாகாது. ஆகவில்லை. அவளுக்குச் சொல்லிக் கொடுத்து சூடேற்றிக் கொதிக்கச் செய்து அயோத்தி வேந்தன் முன் குதிக்கச் செய்தவள் கூனியாவாள். இப்படி ஒரு நிகழ்ச்சி பிறகு நடக்கும் என்பதை முன்பே அறிந்திருந்த கோசலைச் செல்வன், சொன்னதைச் சொல்லும் கிளிக்கு அதே குணமுடைய கைகேயியின் பெயரையே வைக்கச்சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையைப் பெத்தா கண்ணீரு தென்னையை வைச்சா இளநீரு

கலியுக கற்பக விருட்சம், தென்னம்பிள்ளை என்ற மனித உறவோடு காட்சி தரும் மரம், தென்னை மரம்.நமது அன்றாட வாழ்வில் தேங்காய் இல்லாத ஒரு இல்லம் கூட கிடையாது. என்றேசொல்லலாம். ஒரு தென்னை மரம் வைத்தால் அது வம்சம் வம்சமாகப் பலன் தரக்கூடியது என்பதாலேயே அதனை தென்னம்பிள்ளை என்றழைக்கின்றோம். வேரில் நீர் வாங்கி உச்சியில் இளநீர் அளிக்கும் அற்புதமான தாவரம் இது.

சிவெபருமானின் அடையாளமாக தேங்காய் கருதப்படுகின்றது. இதில் மூன்று கண்கள் இருப்பதால் முக்கண்ணனின் அம்சமாகவே தேங்காய் போற்றப்படுகிறது. இந்தத் தேங்காயை இறைவனுக்குப் படைக்கும் பிரதான நிவேதனப் பொருளாக நாம் இன்றளவுக்கும் பயன்படுத்தி வருகிறோம். செழுமை, வளமை, வெற்றி ஆகியவற்றின் அடையாளமாக இருப்பதும் தென்னை மரம். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், ஒரு ஊரின் அழகுக்கும் பெருமை சேர்ப்பது தென்னந்தோப்புக்கள் தான். மஹாலட்சுமியின் சின்னமாகவும் தென்னை மரம் உள்ளது.



தெய்வீகத்தன்மை கொண்ட தென்னை மரம் பொருளாதார ரீதியாகவும் மக்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. மகாகவி பாரதி, தென்னையின் பெருமையை பாடியிருக்கிறார்.

**காணி நிலம் வேண்டும் -பராசக்தி**
**...அங்கு கேணி அருகினிலே தென்னை மரம்**
**கீற்றும் இளநீரும் பத்துப் பன்னிரண்டு தென்னையும்**
**பக்கத்திலே வேணும்...**

கவியரசு கண்ணதாசன் தமது திரைப்பாடல் ஒன்றில் உணர்ச்சி பூர்வ வரிகளாக சொல்லியிருக்கிறார். **"பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையை வைச்சா இளநீரு"** என்று சொந்தப் பிள்ளையை விட தென்னம் பிள்ளை மேல் என்ற பொருள் தொனிக்கும் வகையில் பாடியிருக்கிறார். " தென்னம்பிள்ளையை பாதுகாத்தால் பெத்த பிள்ளைக்கும் உதவும்" என்பது நம்மிடையே நிலவும் சொல்லடை.

**"வாக்குண்டாம்..." என்று தொடங்கும் விநாயகர் துதிப்பாடலில் "நன்றி ஒருவர்க்கச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா -நின்று**
**தளரா வளர்த்தெங்கு தான் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்"**

என்ற வரிகள் மனித வாழ்வு முறைக்கு தென்னையை உதாரணம் காட்டுகின்றன. அதாவது தென்னை மரம் தான் நிலத்திலிருந்து குடித்த தண்ணீரை சுவையுடைய இளநீராக தலைவழியாகத் தருகிறது. அதைப் போலவே ஒருவருக்கு நாம் உதவி செய்தால் தக்க தருணத்தில் அவர் நாம் செய்ததை விட அதிக அளவில் அந்த உதவியைத் திரும்ப செய்வார். ஆகையால் ஒருவருக்குச் செய்த உதவி எப்போது திரும்பக் கிடைக்கும் என்று எண்ணத் தேவையே இல்லை. தென்னை மரம் போல உதவுவார் என்பது தான் இதன் கருத்து.

இன்றைக்கு அனைத்து மங்கள நிகழ்வுகளிலும், துக்க நிகழ்வுகளிலும் தேங்காய் உடைக்கும் வழிபாடு நமது மரபாக இருக்கிறது.

பனை மரத்தைப் போலவே தென்னை மரத்திலிருந்தும் கள் இறக்கப்படுகிறது. மிதமாக உட்கொண்டால் இது உடல் நலத்துக்கு மிகவும் நல்லது என்பார்கள்.

மரத்தில் ஒரு தேங்காய் முழுமையாக வளர்ச்சி பெற ஒரு வருட காலம் ஆகும். முதல் 120 நாள்கள் வரை இளநீர் பருவம். அடுத்து 160 நாள்களில் தேங்காய் பருப்பு உருவாகி விடும்.240 நாளில் முழு தேங்காய் பருப்பு உருவாகிவிடும். 12ஆவது மாதத்தில் முற்றிய தேங்காயை மரத்தில் இருந்து பறித்துக் கொள்ளலாம்.

தென்னை மரம் பற்றிய தகவல்கள் , குறிஞ்சிப் பாடல்கள், புறநானூறு, பதிற்றுப் பத்து ஆகிய தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. சங்க நூல்களில் தென்னை மரத்துக்கு தாழை, தெங்கு,நாலிக்கேரா,இலாங்கலி எனப் பல பெயர்கள் உண்டு. தென்னை மரத்தில் பலவகை உள்ளன. தற்போது ஒட்டு ரக தென்னங்கன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.இது விவசாயிகளுக்க அதிக விளைச்சல் தருகிறது.

தென்னையில் இருந்து கிடைக்கக்கூடிய அனைத்துப் பொருள்களும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் மருந்தாகவே உள்ளன. தாய்ப்பாலுக்கு

**(12 ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையைப்....

**(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இணையான உணவாகக் கருதப்படுவது தேங்காய்ப்பால்.

சித்த மருத்துவத்திலும் ஆயுர் வேதத்திலும் தேங்காய் எண்ணெய் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

இளநீர் உடல் சூட்டைத் தணிக்கும் என்பது உலகறிந்த உண்மை. கோடை காலம் வந்து விட்டால் சாலை ஓரம் முழுதும் இளநீரை மலை போலக் குவித்து பொழுது சாயும் வரை விறுவிறுப்பாக விற்கின்றனர். இப்போது வெளிநாடுகளில் கூட போத்தலில் அடைத்து குளிர்பானமாக விற்கின்றார்கள்.

இளநீரில் பொட்டாசியம், பாஸ்பரஸ்,தாமிர, கந்தக, இரும்புச் சத்து, வைட்டமின்கள் உள்ளன. வாழைப்பழத்தைப் போல இரண்டு மடங்கு பொட்டாசியம் இருக்கிறது. கொழுப்புச் சத்து அறவே இல்லை. சர்க்கரைச் சத்து, பழரசங்களில் இருப்பதை விட மிகக் குறைவாகவே உள்ளது. இளநீர் வயிற்றிலுள்ள புழுக்களைக் கொல்லும். சிறு நீரகத்தை பாதுகாக்கும். சில வகைப் புரதச் சத்து , இதில் பசும்பாலை விட அதிகம் இருக்கிறது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை யாருக்கும் கொடுக்கலாம். சிறுநீரக குடல் தொற்று நோய்கள், வயிற்றுப் போக்கு எல்லாவற்றுக்கும் அருமருந்து.

ஹஸ்த நட்சத்திரம் 2ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கான விருட்சமாகவும் இறைவனோடு சேர்த்து வணங்கப்படும் தலங்கள் சில உள்ளன.

நாகை மாவட்டத்தில் உள்ள திருத் தெங்கூர் சிவன் கோயிலிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில், காவிரி ஆற்றுக்கு வடக்கு கரையில் உள்ள வடகுரங்காடு துறையில் உள்ள சிவன் கோயிலிலும் தல விருட்சமாக தென்னை மரம் இறைவனோடு சேர்ந்து பக்தர்களால் வணங்கப்படுகிறது.

திருத்தெங்கூர் வெள்ளிமலை நாதர் கோயிலில் தான் இறைவன் வெள்ளிமலைநாதர். ரஜதகிரிஸ்வரராகவும் அன்னை பார்வதி பெரியநாகியாகவும் அருள் பாலித்து வருகிறார்கள்.

---

**அன்பார்ந்த ஞானச் செல்வர்களே!**

**ஞானக்கதிர் உங்கள் ஞானப்பசியை ஓரளவு தணித்திருக்கும் என நம்புகின்றோம். நீங்கள் பெற்ற ஞானத்தை மீட்டுப் பார்க்க உங்களுக்கு இங்கு ஒரு சந்தர்ப்பம்.**

## வினாக்கள்

1. சிங்கைப் பரராச சேகரனால் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குக் அண்மையில் அமைக்கப்பட்ட தீர்த்தக்கேணியின் பெயர் என்ன?
2. நல்லூரில் நாற்திசையிலும் அமைக்கப்பட்டுள்ள காவல்தெய்வங்கள் எவை?
3. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் பாடியவர் யார்?
4. வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் குளிர்த்தி உற்சவம் எந்தப் பட்சத்தில் நடைபெறும்?.
5. யோகர் சுவாமிகளின் இருப்பிடம் அமைந்திருந்த இடம் யாது?

வினாக்களுக்கான சரியான விடையை எழுதி ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். சரியான விடையெழுதும் 3 அதிஸ்ட சாலிகளுக்கு 3 மாதத்திற்கான ஞானக் கதிரின் புத்தகம் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். விடைகளை எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்
'ஞானக்கதிர்'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர்

## விண்ணப்பம்

பெயர் :.........................................................................

விலாசம் :...............................................................................

தொ.பே.எண் :...............................................................................

திகதி:..................

கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுக்கு அபிஷேகங்கள், அர்ச்சனைகள், ஆராதனைகள் செய்வது ஏன் தெரியுமா ?

பகவத்கீதையில் பகவான், நீ எதைச் செய்தாலும், எதைச் சாப்பிட்டாலும், எதை ஹோமம் செய்தாலும், எதைக் கொடுத்தாலும், எந்தத் தவத்தைச் செய்தாலும் அதையெல்லாம் எனக்கு அர்ப்பணமாகச் செய் என்று கூறியுள்ளார். நாம் உண்ணும் உணவை இறைவனுக்குப் படைப்பதும், நாம் உடுக்கும் துணியை இறைவனுக்கு உடுத்திய பிறகு நாம் உடுத்துவதும், நாம் கட்டும் வீட்டை அவன் கோயிலாகக் கருதுவதும் சிறந்த தெய்வ ஆராதனையாகும். நாம் நீராடி மகிழ்வதால் இறைவனுக்கும் அபிஷேகம் செய்து மகிழ் கிறோம். உண்ணும் சோறு, பருகும் நீர், மெல்லும் வெற் றிலை எல்லாம் கண்ணன் என்கிறார். நம்மாழ்வார்.

இவை அனைத்தும் உன்னத மனதின் இயல்பான வெளிப்பாடுகள். இந்த ஆராதனை முறை நெடு நாளாக நமது மூதாதையர் கண்ட வழிபாட்டுச் சம்பிரதாயம். உலக வழக்கில் நமது மரியாதைக்கு உரியவர்கள், அன்பிற்கு உரியவர் கள், உறவினர்கள் என்ற நிலையில் இருப்பவர் களுக்கு நாம் ஏதேனும் வாங்கிக் கொடுக்க நினைக் கிறோம், வாங்கியும் கொடுக் கிறோம். அது போன்று எல்லா உறவுகளின் ஒட்டு மொத்தமான உறவினனான (சரியாகச் சொல்லப் போனால், உண் மையில் உள்ள ஒரே உறவின னான) நம் இறைவனோடு, நீங்கள் குறிப்பிட்ட வழிபாட்டு முறைகள் அனைத்தின் மூலமாகவும் நாம் தொடர்பு கொள்கிறோம்.

## சங்கடஹர சதுரத்தியின் மகிமை தெரியுமா?

நமக்கு வரும் சங்கடம் அனைத்தையும் நீக்கிச் சௌபாக்கியம் தரவல்லது சங்கடஹர சதுர்த்தி விரதம். எல்லா விரதங்களிலும் இவ்விரதம் மிகச் சிறந்தது சங்கடஹர சதுர்த்தி விரதம், இது சங்கடஹரணம் என்றும் அழைக்கப் பெறும். ஆவணி மாதம் தேய்பிறைச் சதுரத்தி தினத்தில் இவ்விரதத்தைத் தொடங்க வேண்டும். இரவு சந்திரன் உதயமாகும் பொழுது விநாயகரை வழிபட்டுச் சந்திரனுக்கு அரக்கியம் தர வேண்டும். அன்று சந்திரன் தெரியாமல் இருந்தால் அடுத்த நாள் புஜை செய்ய வேண்டும். மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தி மிக மிக உயர்வானது. அதுவும் செவ்வாய்க்கிழமை அந்நாள் அமைவது மிகவும் விசேஷம். அது மஹா சங்கடஹர சதுர்த்தி என்றழைக்கப்படுகிறது.

சங்கடஹர சதுரத்தி விரதம் இருந்து பயன் பெற்றவர்கள்:

காட்டில் தருமபுத்திரர் இவ்விரதத்தை மேற்கொண்டார்.

பாண்டவர்க்கு இவ்விரதத்தை உபதேசித்தவர் கண்ணபிரான்.

முதல் முதலில் தன் தாய் பார்வதி தேவிக்குக் கணபதியே இவ்விரதத்தைச் சொல்லி அருளினார்.

இந்திரன், சிவன், இராவணன் போன்றோர் இவ்விரதத்தினால் நற்பயன் அடைந்திருக்கின்றனர்.

அனுமன் சீதையைக் கண்டது, தமயந்தி நளனை அடைந்தது, அகலிகை கௌதமரை அடைந்தது போன்றவை.....

## தலவிருட்சம் காணப்படுவது ஏன்?

விருட்சம் என்பது மரம். மரங்கள் அடர்ந்த பகுதியில் அந்த மரங்களிலும் கடவுள் தன்மை உண்டு என சொல்வதற்காகவும், அந்த மரத்தின் நலன்களை தலைமுறை தாண்டி கொண்டு செல்லவும் தலவிருட்சங்கள் அமைக்கப்பட்டன. ஆல், புளி, வேம்பு, மா, வன்னி, ' திருக்கொன்றை, மருதம், வில்வம், நாவல் என ஒவ்வொரு மரத்திற்கும் உள்ள தனிப்பட்ட மருத்துவ குணநலன்களை மக்களுக்கு உணர்த்தவே இவ்வாறு செய்யப்பட்டன. வன்னி மரம், வில்வ மரம் போன்றவை கோயில்களைத் தவிர மிக குறைவான இடங்களில் மட்டுமே இப்போது காணப்படுன்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நந்திக்கடலோரம் நமையாளும் கண்ணகை

கடந்த 01.06.2015 அன்று வற்றாப்பளை கண்ணகை அம்மான ஆலய வருடாந்த பொங்கல் குளிர்த்தி உற்சவம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. வைகாசி விசாக பௌர்ணமியில் கூடும் இலட்சக்கணக்கான அடியார்கள் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆல யச்சூழலில் ஜனசமுத்திர மாக காட்சி யளித்தனர்.

கண்ணகி வழிபாட்டின் சிறப்பிடமாகக் கருதப்படும் வற்றாப்பளை கதிர்காமக்கரை யாத்திரையின் ஆரம்ப இடமாகவும்




விளங்குகின்றது.

சிலம்புகூறுதல் என்னும் காப்பியம் ஆலயத்தில் பக்தி பூர்வமாகப் படிக்கப்பட அடியார்கள் சூழ்ந்திருந்து இந்தக் கதையைக் கேட்கும் புராண மரபு இங்கு விரிந்து செல்கின்றது.

சிலாவத்தை கடற்பகுதியில் சமுத்திரப்பகுதியில் எடுக்கப்படும்

கடல் நீரில் காட்டா விநாயகர் ஆலயத்தில் ஏற்றப்படும் தீப ஒளியுடன் இவ்விழா எழுச்சியுற்று வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை நோக்கி மடைப் பொருள்களுடனும், கடல் நீர் நிறைந்த தீர்த்தமும் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இடையர்களுக்குக் காட்சி கொடுத்து பொங்கலும் கடல் நீர் தீபவழிபாடும் ஏற்றுக்கொண்ட கண்ணகை ஒவ்வொரு வைகாசி விசாகப் பூரணையிலும் தான் வருவதாக இடையர்களுக்குக் கூறிச்சென்றாள். அந்த நாள் தொட்டு இவ்வழிபாடு பரம்பரை பரம்பரையாக




இயற்றப்படுகிறது.

மாமல்ல புரத்திலிருந்து செதுக்கி எடுத்துவரப்பட்டுள்ள கருங்கற்களைக்கொண்டு இவ்வாலயம் கருங்கற்கோயிலாக மிளிரும்காலம் வெகுதூரத்தில் இல்லை. நந்திக்கடலோரம் அமர்ந்திருந்து ஆட்சிசெய்யும் கண்ணகை அம்மன் எல்லோருக்கும் திருவருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலை நாடுகள் பலவும் இன்று விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கின்றன. கடந்த நானூறு ஆண்டுகளில் அங்கு நிகழ்ந்துள்ள சாதனைகள் மனிதனின் வாழ்க்கை முறையையே மாற்றி இருக்கின் றன. மனிதனுக்கு பதிலாக எதனை யும் செய்யக்கூடிய இயந்திரங்களை மனிதன் கண்டுபிடித்து விட்டான். இது இயந்திர ஆட்சி நடக்கும் உலகம்.

ஆனால் அந்த விஞ்ஞானிகள், அந்த முன்னேற்றத்தை அனுபவிக் கும் மேலைநாட்டு மக்கள் இன்று மனஅமைதிக்காக மெய்ஞானத்தை நாடி வருகிறார்கள். சில நூறு ஆண்டுகளுக்கு முன் கிடைத்த இந்தப் புதிய சாதனங்கள் நிம்மதி யைத் தரவில்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்து மதம் போற்றிக் காப்பாற்றி வைத்துள்ள உபநிடதசாரங்களில் கிடைக்கும் அமைதியைத் தேடி வருகிறார்கள்.

விஞ்ஞானத்துக்கும் மெய்ஞ் ஞானத்துக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டிற்கும் உடல் உழைப்பும் உள்ளப் பக்குவமும் ஒத்துழைக்க வேண்டும். இரண் டுமே அறிவின் எல்லையை தொட விரும்புகிறவைதாம். விஞ்ஞான தத்துவங்களைச் சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. நிரூபித்தால் தான் ஒப்புக்கொள்வார்கள். நமது இந்து மதத்தில் உள்ள பழம் பெரும் நூல்களும் அப்படிப்பட்டவைதாம். அவற்றின் பொருளுக்கு விளக்கம் தந்த ஆதிசங்கரர் போன்ற பெரியோர்களும் எதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லை. எது எப்படி ஏன் என்ற கேள்விகளைக் கேட்டுப்பார். பதிலைப் புரிந்து கொள். அப்போது தான் நீ அதன் வழி நடப்பது எளிதாக இருக்கும் என்று நமது நூல்கள் சொல்கின்றன. உபநிடதங்கள் பலவற்றிலும் உண்மைகள் கேள்வி பதில் வாயிலாகத்தான் விளக்கப்படு கின்றன. அதனால் தான் இன்று விஞ்ஞானத்தில் முன்னேற்ற மடைந்த நாட்டு மக்களை நம்முடைய ஆன்மீக ஞானம் பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஒரு குழந்தை இந்த உலகத்தில் பிறந்ததும் ஏதும் அறியாத குழப்பத்தில் தவிக்கிறது. அதனால் தன்னைச் சுற்றி உள்ள குரல்களை அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை. கண்கள் சுற்றிப்பார்த்து அலைகின்றன. மெல்ல மெல்ல அது ஒரு முகத்தை அடையாளம் கண்டு கொள்கிறது. ஒரு குரல் அதற்கு புரிகிறது. அது தன்னுடைய அம்மா என்று தெரிந்து கொள்கிறது. அம்மாவின் மூலம் அப்பாவையும் தெரிந்து கொள்கிறது. ஐம்புலன்களின் வழியாக அது கொஞ்சம் கொஞ்சமாக உலகத்தை தெரிந்து கொள்கிறது.

இன்றைய விஞ்ஞானிகளி டையே ஒரு தத்துவம் உண்டு. எந்தக் கண்டுபிடிப்பும் நிரந்தர மானது அல்ல. தரையில் வேகமாகச் செல்ல கண்டுபிடித்த பிறகு வானத்தில் வேகமாகச் செல்ல வழி கண்டுபிடித்தான். அதுவும் போதாது என்று விண்வெளியில் பறந்து பூமியை விட்டே செல்ல விண்வெளிக்கப்பலைக் கண்டுபிடித்தான். உடல் நோயைக் கண்டு பிடிக்க மருந்துகளைக் கண்டுபிடித்தவன் இன்று உயிரின் தத்துவம் என்ன என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறான். எப்போதும் முன்னால் ஓர் அடிவைத்து செல்ல வேண்டும். முன்னேறு என்பதே விஞ்ஞானி களின் தாரக மந்திரம். நோர்வே நாட்டில் வடதுருவத்துக்குச்செல்ல ஒரு நூதனக் கப்பலை உருவாக்கினார்கள். அதற்கு பெயர் என்ன தெரியுமா? முன்னேற்றம் என்பது தான்.

இந்தத் தத்துவத்தை நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவான நமது உபநிடதங்களும் கூறுகின்றன. எந்த நிலையிலும் அப்படியே நிலைத்து நின்று விடாதே. எழுந்திரு. விழித்து நோக்கு. புறப்படு என்பது உபநிடத வாசகம். அடைய வேண்டிய எல்லையை அடையும் வரை அமைதி கிடையாது. அதுவரை நீ உன்னையே தொடரந்து மேன் மேலும் ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள் என்று அது கூறுகிறது.

விஞ்ஞானத்தின் மூலம் இவ் வளவு புதுமைகளைக் கண்டுபிடித்து விட்டோம். அது போதுமா? தொட் டும் கேட்டும் பார்த்தும் சுவைத்தும் உணரக்கூடிய இந்தப் பொருட்களை நாம் புரிந்து கொள்ள வைப்பது எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நம்முடைய மனம். அதனை இயக்குவது யார்? அதன் பின்புலத்தின் சக்தி என்ன? அந்தப் பின்புலத்தின் தத்துவம் என்ன? இந்த ஆராய்ச்சியில் தான் இன்று விஞ்ஞானிகள் இறங்கி இருக்கிறார்கள். இதை உணராத வகையில் அவர்களுடைய ஆராய்ச்சியில் ஆழ்ந்த பண்பு கிடைக்காது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். மனிதன் தனது பார்வையை உள்நோக்கித்திருப்ப விரும்புகிறான் இன்று. இதைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது மதம் அதன் அரிய நூல்கள் தந்த அறிவு சாதித்திருக்கிறது. சுருங்கச் சொன்னால் இன்றைய விஞ்ஞானம் மனிதனைச்சுற்றியுள்ள இயற்கையை ஆராய்ந்திருக்கிறது. நமது மதம் தந்த மெய்ஞ்ஞானம் மனிதனையே ஆராய்ந்திருக்கிறது. அது ஆராய முற்பட்டது மனிதனின் தத்துவ ஞானம். இயற்கையில் நாம் இன்று காணும் பொருட்கள் அன்று முதல் இன்று வரை மாறாமல் அப்படியே இருந்தவை. இருப்பவை. ஆனால் மனிதனோ உலகின் கோடிக்கணக்கான ஆண்டுகள் வளரச்சியில் வெகுதூரம் மாறி வளரந்து முன்னேறி வந்து விட்டான். உலகின் வளர்ச்சியில் இவ்வளவு தூரம் முன்னேறிய மனிதனையே ஒரு சோதனைப் பொருளாக்கி ஆராய்ந்து பார்க்கிறது இந்துமதம்.

விஞ்ஞானி மனிதனையும் ஆராய்ந்திருக்கிறான். ஆனால் அது ஒரு அளவுடன் நின்று விட்டது. மனிதனின் உடற்கூறுகள் நரம்பு மண்டலங்கள் புலன்களின் அமைப்புக்கள் எல்லாவற்றையும் அவன் ஆராய்ந்து விட்டான். ஆனால் இவையெல்லாம் மேலாகத் தெரியும் வெளிப்படையான தோற்றங்களைப்பற்றிய அறிவேயாகும்.மேலும் இவற்றையெல்லாம் இயக்குகின்ற உள்மனம் எப்படிப்பட்டது. உடம்பில் உள்ள கோடிக்கணக்கான அணுக்களை இயக்கும் மிகப்பெரிய சக்தி உடல் வடிவத்தில் எங்கே இருக்கிறது. அதை மனிதன் விஞ்ஞான மூலம் கண்டு பிடிக்கமுடியவில்லை.

தன்னைத்தானே உயர்ந்து கொள்வது என்பது தான் இன்றைய விஞ்ஞானத்தின் புதிய பிரச்சினை. மிகப்பெரிய பிரச்சினை. மூளை எப்படி இயங்குகிறது. அதில் என்றும் அழிவில்லாமல் இயங்கும் சிந்தனா சக்தி எங்கிருந்து வருகிறது. அதனை ஆக்கபூர்வமாக வளர்த்து உருவாக்குவது எப்படி? இதனையே இன்று அவர்கள் நாடுகிறார்கள். அவர்களுக்கு புதிய ஞானமாகத் தென்படுவது இந்த ஆராய்ச்சி.

சண்டிதேவி மகாத்மியம் இந்த சக்தியை விவரிக்கிறது. ஐம்புலன்கள் தரும் அறிவுக்கு மேலே போய் எல்லையை தொட வழிகாட்டுகிறது. நான் யார? என்னை நான் புரிந்து கொள்வது எப்படி? அதன்பின் நான் எப்படிச் செயற்படவேண்டும். இதைச்சொல்லிக் கொடுக்கிறது. உபநிதங்களும் கீதையும் இந்த ஆன்மீக வழியை நமக்குக் காட்டுபவை. சிறுகுழந்தைக்கு அறிவு கிடைத்ததும் அதன் சக்தி பெருகிவிடுகிறது. தன்னைவிடப் பலமடங்கு பெரிய மிருகங்களை அது அடக்குகிறது. மிரட்டிச் செயற்படுத்துகிறது. பார்க்கத் தெரியாமல் கேட்டுப்புரிந்து கொள்ளத் தெரியாமல் இருந்த குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை தன் வசப்படுத்த முயலுகிறது. இந்த வளர்ச்சியை தந்தது எது.? கையும் காலும் வாயும் அல்ல. மிருகங்களுக்கும் அவை உண்டு. இந்த அறிவுக்குப் பின்புலனாக இருப்பது ஆத்ம ஞானம். அதுவே அறியாக் குழந்தையை பக்குவம் பெற்ற மனிதனாக்குகிறது.

மனிதனுக்கு மட்டும் தான் இந்த வளர்ச்சி உண்டு. சிங்கமும் புலியும் உருவகத்தில் தான் வளருகிறது.



இந்த ஆன்மீக வளர்ச்சி அவற்றுக்கு கிடையாது. சாதாரண உடல் அமைப்பிலிருந்து பிரிந்து வளரும் புத்திதான் மனிதனின் சிறப்பு. சிங்கத்துக்கும் புலிக்கும் அந்தப் புத்தி வளர்ச்சி கிடைத்துவிட்டால் அப்புறம் மனிதன் மிஞ்ச முடியாது.

நமது வேதாந்தங்களும் உபநிடதங்களும் இந்த ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையான அறிவைத்தான் கொடுக்கின்றன. ஆத்ம வித்தியா என்ற அந்த மெய்ஞ்ஞானம் இன்று மிக வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தை விட உயர்வானது. உயிருள்ளது. மனிதனுக்கு மட்டும் அமைந்த சிறப்பான பேரறிவைப் பயன்படுத்துவது. அதனால்தான் இன்று உலகெங்கும் உள்ள மக்கள் விஞ்ஞான வளர்ச்சியின் முழுப்பயனையும் பெற்று அனுபவித்த மக்கள் மனஅமைதியை அளிக்கவல்ல இந்து மதத்தின் இந்த ஞானத்துக்காக இந்தியாவை தேடி ஓடி வருகிறார்கள்.

**விஞ்ஞானத்தின் மூலம் இவ்வளவு புதுமைகளைக் கண்டுபிடித்து விட்டோம். அது போதுமா? தொட்டும் கேட்டும் பார்த்தும் சுவைத்தும் உணரக்கூடிய இந்தப் பொருட்களை நாம் புரிந்து கொள்ள வைப்பது எது? நம்முடைய மனம். அதனை இயக்குவது யார்? அதன் பின்புலத்தின் சக்தி என்ன? அந்தப் பின் புலத்தின் தத்துவம் என்ன? இந்த ஆராய்ச்சியில் தான் இன்று விஞ்ஞானிகள் இறங்கி இருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுவள நாட்டில் உள்ள திருத்தலங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் தொண்டைமானாறு என்னும் கிராமத்தின் ஆற்றங்கரையில்

குருகுலமாகிய வருண குலத்தில் பரதசாதியில் இடைவிடாத தியான வழிபாட்டு மூலம் எம்பெருமானது பாதாரவிந்தத்தைப் பற்றிய மருதர் கதிர்காமரே இவ் ஆலயத்தில் தோன்றி வழிபாடு செய்த பின்

வரலாற்றினை கண்ணுற்ற எம்பெருமானார் ஆற்றங்கரையில் தன்னை நாள் தோறும் நினைந்துருகி வணங்கி மீன்பிடிக்கும் கதிர் காமர் முன் மனித உருவில் தோன்றி கதிர்காமா என்

# கதிர்காமருக்கருளிய கல்லோடைக்கந்தன்

அமைந்துள்ளது. இதன் தோற்றம், அமைப்பு, நடைமுறை என்பன தனித் துவமானதும், வரலாற்றுச் சிறப்பும் மிக்கவுமாகவுள்ளது.

கந்தப் பெருமானது கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கிறது. அவரை நாடி வரும் அடியார்கள் பக்தி வெள்ளத்திலும், கருணைக் கடலிலும் மூழ்கி திருவருளையும், திருவருள் பிரசாதத்தையும் தினந்தோறும் பெற்ற வண்ணம் இருக்கிறார்கள். இவ்வாலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய தெய்வாம்சங்களை ஒருங்கே அமையப் பெற்றுள்ளது.

ஆகம விதிகட்கு அகப்படாத அதற்கு அப்பாற்பட்ட அன்பு, பக்தி ஞானம் ஆகிய அபரிதமான மார்க்க வணக்க தனித்தலமாகக் கொண்டுள்ள இங்கே கந்தப் பெருமானது அருளாட்சி நடைபெறுகிறது. இங்கே முருகன் "பூரணம்" என்று கூறும் படியாக பத்திரசக்தி முகூர்த்தத்தில் அமர்ந்திருக்கிறார்

இந்த ஆலயத்தில் வெற்றிலை வைத்து பக்திரசக்தி வழிபாடு செய்வதுடன் எழுந்தருளி வரும் எம்பெருமா னாகிய வேலின் நடுவில் முக்கோணவடிவில் பொட்டுடன் வெற்றிலை வைத்து வீதி வலம் வருவதை இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

உலகில் வேறு எவ்விடத்திலும் இல்லாத தனித்துவமான வழி பாட்டைக் கொண்டுள்ளது. இங்கு நடை பெறும் முகூர் த்தத்தை பக்திர சக்தி முகூர்த்தம் என்றும் வழிபாடு மான சிக மௌன அன்பு வழிபாடு என்றும் சொல்லப் படுகிறது. இதன்காரணமாக இத்திருத்தலம் ஞானலய திருத்தலமாக மிளிர்கிறது.

இன்று உள்ள அவர்வழித் தோன்றிய சந்ததியினருக்கு வழிபாடு செய்ய விட்டுச்சென்றுள்ள தெய்வீகப் பொக்கிசமாகும்.

19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ் ஆற்றங் கரையோரத்தில் வாழ்ந்த பரதகுலத்தவர்களில் மூத் தவரும் பக்திமானுமாகிய மருதர் கதிர்காமர் என்பவர் நாள்தோறும் இவ் ஆற்றில் மீன் பிடித்து சீவியம் நடத்தி வந்தார். இவர் மீன் பிடிக்கச் செல்லும் முன்னர் இங்கு சமாதியடைந்த பூவரசமரத்தினை வணங்கியே செல்வது வழக்கம் இவர் நாள்தோறும் இவ்வாறு செல்வதன் மூலம் பக்தி மேம்பாட் டினை பெற்றுக் கொண்டு வரலாயினார்.

இவ்வாறு இவரது பக்தி

னிடம் இக்கரைக்கு வா என அழைத்தார். இதன் பொருள் நீ செய்யும் தொழிலை விடுத்து என்பால் என் பாதார விந் தத்தைப் பணிய என்னிடத்தில் வா என்பதாகும். இத னைக் கேட்ட கதிர்காமர் ஆற்றின் மேலிருந்து கரைக்கு வந் தார். இவ்வாறு வந்து சேர்ந்தவரை இறைவன் கூட்டிச் சென்று பூவரசமரத்தினடியினையும் அதன் அருகில் வீரவாகு தேவர் சந்திக்கடன் செய்த இடத்தினையும் சுட்டிக் காட்டி நீயே எல்லா வகையிலும் ஏற்றவன் என்று கூறி மறைந்தருளினார்.

முனிவர் சமாதியடைந்த இடத்தில் குரு பூசை செய் யவும்

(18 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என பெருமானார் கேட்ட தன்படி கதிர் காமரும் அவர் பின் வரும் சந்ததியினரும் பிதிர்க் கடமை போன்று செய்து வரலானார்கள்.. இது செய்யாவிட்டால் மிகுந்த தொல்லைகள் ஏற்படும் எனக்கூறினார். இதனால் அன்றுமுதல் இன்றுவரை இதனைக் கடைப்பிடித்து பூஜைகள்செய்து வருகின் றனர்.

கதிர்காமர் முதலில் ஆலயம் அமைத்து பூஜை செய்தபின் மற்றைய பங்கா ளரது காணிகள் யாவற் றையும் கொள்விலையாக வேண்டினார் இதற்கு தோம்பு உறுதி என்பன சான்றாக உள்ளன. கதிர் காமரும் அவர் மகனான



வேலுப்பிள்ளை ஐயரும் மற்றும் பிள்ளைகள் எல்லோருமாக இந்தக் கோயிலை அமைத்து முதன்முதலில் காலத்தில் எம்பெருமான் கதிர்காமருடன் உறவாடிய காலம் 1824ம் ஆண்டு கோயில் பதிவேடு கதிர்காமரும் வேலுப்பிள்ளை ஐயரும் மற்றும் கதிர்காமரது பிள்ளைகளும் பனை யோலை, யால் வேயப்பட்ட சிறு கொட்டில். அமைத்து அதில் வழி பாட்டுப் பூஜைசெய்தார்கள்.

இவர்களும் தமது பிள்ளைகளுக்கு கூறி சந்ததி சந்ததியாக உபதேச முறை கூறப்பட்டு வந்தது இதன் பிரகாரமே கர்ண பரம்பரையாக கூறப்பட்ட தொண்டுகளை மற்றைய பரம்பரையினரும் கைக் கொண்டு வருகின்றனர் இவர்கள் இக்கோயிலின் சுற்றாடலிலும் சுற்றி உள்ள ஊர்களிலும் ஆசாரமாக புனிதமாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது பூசை முறையானது பக்தி மார்க்கத்தின் உச்சஸ்த்தானமாகும் செல்வச் சந்நிதி ஆலயத்தில் அமர்ந்திருக்கும் ஆற்றங்கரை வேலவனது அருளா ட்சிச் சிறப்பை நோக்கினால் செல்வங்கள் பலவற்றை தம்மை நாடி வரும் அடியார்க்கு நல்கி அவர் களது பிறவிப் பிணி யை அறுக்கும் திருப்பிரசாதத்தை நாள் தோறும் கொடுத்த வண்ணம் இருப்பதைக் காணலாம்.

நாள்தோறும் குறிப்பாக வெள்ளிக்கிழமை தோறும் வரும் அடியார்க்கு கந்தப்பெருமானது கருணைக் கடா ட்சமும் கிடைக்கத் தவறு வதில்லை.செல்வச் சந்நிதிக்குப் போய் செல்வம் எல்லாம் பெறுவீர் என ஓர் சித்தர் கூறினார். அரும் செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம், பிள்ளைச் செல்வம் இவ்வாறு எண்ணிறைந்த செல்வங்களை வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்த வண்ணம் இருக்கிறார்.

இவர் ஒரு அருட்கொடை வள்ளல் இவர் பசிப்பிணி அறுப்பதில் அன்னதானக் கந்தனாகவும் காட்சி தருகிறார். இக்கோயிலைச் சுற்றி ஏறக்குறைய 45 மடங் கள் உள்ளன இவ ற்றில் அன்பர்கள் தம் நேர்த்தி மூலம் அன்னத்தை தான மாக கொடுக்கின்றனர்.

**சந்நிதி முருகனது கருணையாவது காந்தத்தை விட கவரும்சக்தி உடையது .அவரது திருவருள் செல்லாத இடமே கிடையாது. இத்தகைய சந்நிதி வேலவன் ஒரு கருணைக்கடல் அவரது கருணைக் கடாட்சம் எளிதில் எல்லோர்க்கும் கிடைக்கக்கூடியது. அவரது அருட் திறனை ஆயிரம் நாவை உடைய ஆதிசேடனாலும் வருணித்து கூறமுடியாது.**

தீராத நோய்க ளை தீர்ப்பதில் கல்லோடைக் கந்தன் பெரும் வைத்தியராக காட்சியளிக்கின்றார். நோயுற்றவர்கள் இங்கு வந்து இவ்வாற்றில் மூழ்கி பிறவிப் பிணியை அவன் கழல் பற்றி கசிந்துருகிக் கேட்க அவர்களது தீராத் துன்பங்களை தீர்த்து வைக்கின்றான். வைத்தியர்களால் கைவிட்டு மருந்தால் மாற்றமுடியாத நோயை தன் திருவருளினால் மாற்றியதை கண்ணுற்ற பக்தி சிரோன் மணி வேதநாயகம் பிள்ளை ஆயுள் வைத்தியர் எல்லாம் கைவிட்டு மாறாத வருநோய்கள் நினதருளா மரு மருந்தாற் போக்கி ஆனந்தமுறுகின்றன என்பார் என பாடியுள்ளார்.

சந்நிதி முருகனது கருணையாவது காந்தத்தை விட கவரும்சக்தி உடையது .அவரது திருவருள் செல்லாத இடமே கிடையாது. இத்தகைய சந்நிதி வேலவன் ஒரு கருணைக்கடல் அவரது கருணைக் கடாட்சம் எளிதில் எல்லோர்க்கும் கிடைக்கக்கூடியது. அவரது அருட் திறனை ஆயிரம் நாவை உடைய ஆதிசேடனாலும் வருணித்து கூறமுடியாது. பரந்து கிடக்கும் பார் வெளியில் பரம் சோதியாக பூரணத்துவமாக பொலிந்து விளங்குகிறார் செல்வச்சந்நிதிக் கந்தப்பெருமான்.

இப்புனித ஆலயத்தைச்சூழ தற்போது 15 மடாலயங்கள் மூலம் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்க்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பரங்குன்றம்

தேவர்கள் தங்களை துன்புறுத்திய சூரபத்மனிட மிருந்து காக்கும்படி சிவனை வேண்டினர். அவர் தன் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினார். அதிலிருந்து ஆறு முகங்களுடன் முருகப்பெருமான் தோன்றினார். சூரனுடன் போரிட்டு அவனை மயிலாகவும், சேவலாகவும் மாற்றி ஆட்கொண்டார். இந்த நிகழ்வு திருச்செந்தூர் தலத்தில் நிகழ்ந்தது. சூரனை வெற்றி கொண்ட முருகனுக்கு, இந்திரன் தனது மகளான தெய்வானை திருமணம் செய்து தரச் சம்மதித்தார். அவர்களது திருமணம் திருப்பரங்குன்றத்தில் நிகழ்ந்தது. திருமணத்திற்கு அனைத்து தெய்வங்கள், தேவர்கள், மகரிஷிகள் என அனைவரும் வந்தனர். நாரதர் முன்னிலையில் முருகன், தெய்வானை திருமணம் நடந்தது. இதேகோலத்தில் சுவாமி இங்கு எழுந்தருளினார். சுவாமிக்கு சுப்பிரமணியசுவாமி என்ற பெயர் சூட்டப்பட்டது.

தேவர்கள் தங்களை தொந்தரவு செய்த, சூரபத்மனை அழிக்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களது வேண்டுதலை ஏற்ற சிவன், தன் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினார். அதிலிருந்து முருகப்பெருமான் தோன்றினார். பின், சிவபெருமானின் கட்டளையை ஏற்று, சூரபத்மனை அழிக்க இங்கு வந்தார். இவ்வேளையில் முருகப்பெருமானின் தரிசனம் வேண்டி, தேவர்களின் குருவான வியாழ பகவான் இத்தலத்தில் தவமிருந்தார். அவருக்கு காட்சி தந்த முருகப்பெருமான், இவ்விடத்தில் தங்கினார். அவர் மூலமாக அசுரர்களின் வரலாறையும் தெரிந்து கொண்டார். அப்போது தனது படைத்தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூது அனுப்பினார். அவன் கேட்கவில்லை. பின்பு, முருகன் தன் படைகளுடன் சென்று, அவனை வதம் செய்தார். வியாழ பகவான், முருகனிடம் தனக்கு காட்சி




தந்த இவ்விடத்தில் எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார். அதன்படியே முருகனும் இங்கே தங்கினார். பின்பு, வியாழ பகவான் விஸ்வகர் மாவை அழைத்து, இங்கு கோயில் எழுப்பினார். முருகன், சூரனை வெற்றி பெற்று ஆட்கொண்டதால் இவர், செயந்திநாதர்' என அழைக்கப்பெற்றார். பிற்காலத்தில் இப்பெயரே செந்தில்நாதர்' என மருவியது. தலமும் திருஜெயந்திபுரம்' (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, திருச்செந்தூர்' என மருவியது.

## அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில்

நாரதர் கொடுத்த கனியை, தனக்கு தராததால் கோபித்துக்கொண்ட முருகன் மயில் மீதேறி இத்தலம் வந்தார். சமாதானம் செய்ய, அம்பிகை பின்தொடர்ந்து வந்தாள். சிவனும் அவளை பின்தொடர்ந்தார். முருகன் இத்தலத்தில் நின்றார். அம்பிகை, இங்கு மகனை சமாதானம் செய்தாள். ஆனாலும் முருகன் விடாப்பிடியாக இங்கேயே இருக்க விரும்புவதாகச் சொல்லி தங்கிவிட்டார். பிற்காலத்தில் இவ்விடத்தில் முருகனுக்கு கோயில் எழுப்பப்பட்டது. சுவாமி குழந்தை வடிவமாக நின்றதால், குழந்தை வேலாயுதர்' என்று பெயர் பெற்றார்.பழத்தின் காரணமாக முருகன் கோபித்து வந்தபோது, அவரைக் கண்ட அவ்வையார், பழம் நீ' (நீயே ஞானவடிவானவன்) என்று ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். இப்பெயரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில், பழநி' என மருவியது.

## அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில்

படைப்புத் தொழிலில் ஆணவம் முற்றியிருந்த பிரம்மன் முருகப்பெருமானை சந்திக்க நேர்ந்தது.அப்போது பிரம்மனிடம் படைப்புத் தொழில் செய்யும் உனக்கு ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியுமா என்று முருகப்பெருமான் கேட்கிறார். இக்கேள்விக்கு பிரம்மனால் பதில் சொல்லமுடியவில்லை என்பதால் அவனுடைய நான்கு தலைகளிலும் முருகப்பெருமான் குட்டினார். கீழே விழுமாறு தம் திருவடி கொண்டு உதைத்து பிரம்மனை சிறையில் அடைத்தார். பின்பு படைப்பு தொழிலை முருகனே செய்தார். பிரம்மன் சிறையில் இருப்பதை நினைத்து வருந்திய திருமால் சிவபெருமானிடம் சொல்லி விடுதலை கிடைக்க வேண்டுகிறார். சிவபெருமானும் முருகனிடம் பிரம்மனை விடுதலை செய்யும்படி கூற தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று முருகன் விடுதலை செய்தார். இதை பார்த்து உளம் மகிழ்ந்த சிவபெருமான் முருகனை தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு பிரம்மனுக்கே தெரியாத பிரணவ மந்திரத்தை நீ எனக்கு சொல்ல வேண்டும் என்று கேட்க முருகனும் எல்லோரும் அறியக் கூறக் கூடாதே என்று சொல்லி சிவபெருமான் காதருகே சென்று பிரணவ மந்திரத்தின் பொருளை உரைத்தார். இந்நிகழ்ச்சி நடந்த தலமே இந்த சுவாமிமலைத் திருத்தலம் என்று தல வரலாறு கூறுகிறது.

## அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருத்தணி

இறைவனைத் தேடி நாமாகவே சென்று விட வேண்டும். நாம் அவனிடம் செல்ல மறுத்து, அவனால் தரப்பட்ட இந்த வாடகை வீடாகிய உலகத்தில் தொடர்ந்து வசிக்க விரும்பினால், அவன் விடமாட்டான். யோகிகளும், ஞானிகளும் அவனை அடைவதற்குரிய வழியைச் செய்து எப்படியோ அவன் திருப்பாதத்தை அடைந்து விடுகின்றனர். பாமரர்கள், இந்த உலகத்தில் நிரந்தரமாக வாழப்போவதாக நினைத்து பொன்னையும்,பொருளையும் குவித்துக் கொண்டிருக்கின்றனர். திருத்தணிகை மலைப்பகுதியில் வசித்த குறவர்களின் தலைவனாக நம்பிராஜன் விளங்கினான். இவன் திருமாலின் புத்திரியை, சந்தர்ப்பவசத்தால் ஒரு வள்ளிக்கொடியின் கீழிருந்து கண்டெடுத்தான். அவளுக்கு வள்ளி என பெயர் சூட்டி வளர்த்து வந்தான். வள்ளி தினைப்புனத்தைக் காவல் காக்கும் பணியைச் செய்து வந்தாள்.தினைப்புனம் என்பது உலகத்தையும், அதில் விளையும் தினைப்பயிர் முழுவதையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் உலகப்பற்று' எனப்படும் ஆசையையும் குறிக்கும். இது உனக்குச் சொந்தமானதல்ல, எனக்குச் சொந்தம்' என்று பறந்து வரும் பறவைகள் பரமாத்மாவாகிய இறைவனைக் குறிக்கும். உலக ஜீவன்களோ இதைப் புரிந்து கொள்ளாமல், கவண்கல்லால் அவற்றை விரட்டியடிப்பது, தெய்வத்தைப் புரிந்து கொள்ளாத தன்மையைக் குறிக்கும்.இந்த உலகமே நிரந்தரமெனக் கருதியிருக்கும் இதுபோன்ற பாமர உயிர்களுக்கு தவம், யோகம், தியானம் இது பற்றியெல்லாம் தெரியாது. இப்படிப்பட்ட உயிர்களையும் ஆட்கொள்ளவே விரும்புவான். அப்படி வள்ளியை ஆட்கொள்ளவே முருகப்பெருமான் முதியவர் வேடத்தில் வந்தார். வள்ளியோ அவரை யாரென அறியாமல் பயந்தோடினாள். இறைவனோ, அவளை ஆட்கொள்ள யானை மூலம் பயமுறுத்தினார். அவர் அவளைத் தழுவினார். இறைவனின் ஸ்பரிசம் பட்டதுமே ஞானோதயம் பிறந்தது. அவருடன் ஐக்கியமாகி விட்டாள். பாமரர்கள், அவள் இறைவனுடன் ஐக்கியமானதை திருமணமாகக் கருதி, வள்ளி திருமணத்தை நடத்தி வைக்கிறார்கள். வள்ளியின் திருமணத்தலம் இது. முருகப்பெருமான், திருச்செந்தூரில் சூரனை சம்ஹாரம் செய்த பிறகு, கோபம் தணிந்து இத்தலத்தில் தங்கியதால் தணிகை மலை' என்று பெயர் பெற்ற இத்தலம் திருத்தணி' என்று மாறியது.

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மதுரை

தமிழ்பாட்டி ஔவையார் முருகனிடம் மிகவும் அன்பு கொண்டவர். முருகன் அவ்வைக்கு அருள் புரிந்து, இந்தஉலகிற்கு பல நீதிகளை உணர்த்த நினைத்தார்.ஒரு முறை அவ்வை கடும் வெயிலில் மிகவும் களைப்புடன் மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தார். இவரது நிலையறிந்த முருகன் மாட்டுக்கார சிறுவனாக வேடமணிந்து, அவ்வை செல்லும் வழியிலிருந்த நாவல் மரக்கிளையில் அமர்ந்து கொண்டார். களைப்புடன் வந்த பாட்டி இந்த மரத்தின் கீழ் அமர்ந்து சற்று இளைப்பாறினார். இதனை மரத்தின் மீது அமர்ந்திருந்த சிறுவன் பார்த்து, என்ன பாட்டி! மிகவும் களைப்புடன் இருக்கிறீர்களே? தங்களது களைப்பை போக்க நாவல் பழங்கள் வேண்டுமா?" என்றான். சந்தோஷப்பட்ட பாட்டி வேண்டும்"என்றார்.உடனே முருகன்,பாட்டி! தங்களுக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?"என்றான். இதனைக்கேட்டு திகைப்படைந்த பாட்டி ஏதும் புரியாமல்,சுட்ட பழத்தையே கொடேன்"என்றார்.சிறுவன் கிளையை உலுக்கினான். நாவல் பழங்கள் உதிர்ந்தன. கீழே விழுந்ததால் மணல் அதில் ஒட்டிக்கொண்டது. அவ்வை அதை எடுத்து மணலை அகற்றுவதற்காக வாயால் ஊதினார். இதை வேடிக்கை பார்த்துகொண்டிருந்த சிறுவன்,பாட்டி! பழம் மிகவும் சுடுகின்றதோ?, ஆறியவுடன் சாப்பிடுங்கள்"என்று கூறி சிரித்தான்.

சிறுவனின் மதிநுட்பத்தை அறிந்த பாட்டி, மரத்தில் இருப்பவன் மானிடச் சிறுவனல்ல என்பதைப் புரிந்து கொண்டார். பின்னர் முருகன் தன் சுயவடிவில் அவருக்கு அருள்பாலித்து முக்தி தந்தார். முருகன் இந்த திருவிளையாடலால் உலகிற்கு ஒரு தத்துவத்தை உணர்த்தினார். அதாவது, உயிர்களின் மீது உலகப்பற்று' என்னும் மணல் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதைப் போக்க வெறும் கல்வியறிவு மட்டும் போதாது. இறைவனை அறியும் மெய்யறிவும் தேவை. பற்றை அகற்றினால் இறைவனை உணரலாம்' என்பதே அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

**கணித்தவர்:**
**திருக்கோவிலூர் KB.ஹரிபிரசாத் சர்மா**




### மேஷம்

கடந்த ஆண்டில் குரு பகவானின் மூன்றாம் இடத்து சஞ்சாரம் தற்போது நான்காம் இடமாகிய சுகஸ்தானத்துக்கு வர உள்ளது. இதனால் வாழ்க்கையில் நிம்மதி கூடும். நன்கு ஆலோசித்து செயல்படும் திறன் ஓங்கும். திடீர் பயணங்கள் இருக்கும். அதிக அலைச்சலுடன் சுபகாரியங்கள் நடந்தேறும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். பொருளாதார நிலையால் சேமிப்பும் உயர்வடையும். வீடு, மனை, நிலம் போன்ற அசையா சொத்துக்களில் முதலீடு செய்து வைப்பது நல்லது. சிலருக்கு தங்கம், வெள்ளி, வைர நகைகள், ஆடை, ஆபரணங்கள் சேரும்.

தாயார் வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். முன்னோர்கள் இழந்த சொத்துக்களை மீட்கும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். திடீர் தொழில், ஆன்மிக பயணங்கள் இருக்கும். சுபசெலவுகள் இருக்கும். தாயார் உடல்நலத்தில் கவனம் தேவை. தொழிலில் ஓய்வின்றி உழைப்பதும், அதிகப்படியான அலைச்சலும் இருக்கும். 65 விழுக்காடு நற்பலனை காணும் வகையில் குருபகவான் அருள் செய்வார்.




### ரிஷபம்

தற்போதைய குருப்பெயர்ச்சியால் சில சங்கடங்கள் இருக்கும். குரு பகவான் தன ஸ்தானத்திலிருந்து 3ம் இடத்திற்கு பெயர்வதால் பொருளாதார நிலை சுமாராக இருக்கும். மன உறுதியும், தைரியமும் கூடும். ஒவ்வொரு விஷயத்திலும் எதிர்பாராத அலைச்சல் இருக்கும். எதிலும் தடங்கலுக்கு பின் வெற்றி கிடைக்கும். முக்கியமான பிரச்னைகளில் எளிதில் முடிவெடுக்க முடியாமல் திணறுவீர்கள். எதிலும் ஒருவித பயம் இருக்கும். உடன்பிறந்தோர் உதவுவார்கள். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

இக்கட்டான நேரங்களில் நண்பர்களின் உதவியால் வெற்றி கிடைக்கும். சுயமுயற்சியால் வலிமை கூடும். வாழ்க்கைத் துணையோடு இணைந்து செய்யும் செயல்களில் நல்ல வெற்றி கிடைக்கும். கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழும் தம்பதியர் ஒன்றிணைவதற்கான சூழ்நிலை கூடி வரும். இக்கட்டான சூழலில் அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. பணிச்சுமையால் ஞாபக மறதி ஏற்பட வாய்ப்பு உள்ளது. எதையும் எழுதி வைத்து செயல்படுவது நல்லது. இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு 50 சதவீத நற்பலன்களை தரும்.




### மிதுனம்

தற்போது தனஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ள குரு பகவானின் செயல்பாட்டால் தடையில்லாத தனவரவு இருக்கும். பொருளாதார நிலை உயரும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். அசையா சொத்துக்களில் முதலீடு செய்வீர்கள். அநாவசிய செலவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். எந்த ஒரு விஷயத்திலும் நன்மை தீமையை ஆராய்ந்து யோசித்து செயல்படுவதால் நிச்சயம் வெற்றி உண்டாகும். பேச்சாற்றல் கூடும்.

உறவினர்கள், நண்பர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை இருக்கும். வாழ்க்கைத்துணையின் உடல்நிலை, மன நிலையில் அக்கறை அவசியம். தம்பதியருக்குள் வாக்குவாதத்தை தவிர்த்து விட்டு கொடுத்து செல்வது நல்லது. நண்பர்களோடு கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். முன்பின் தெரியாத புதிய நபர்களுடன் மிகுந்த கவனத்துடன் பழக வேண்டியது அவசியம். வாகனங்களை இயக்கும் போது நிதானம் தேவை. இந்த குருப்பெயர்ச்சியால் கடன் பிரச்னை தீரும். எந்த ஒரு காரியத்திலும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் செயல்படுவீர்கள். 80 சதவீத நற்பலன்களை தரும் வகையில் இந்த குருப்பெயர்ச்சி அமைந்துள்ளது.




### கடகம்

கடந்த ஆண்டு அதிக அலைச்சலை தந்த குருபகவான் இப்பொழுது உங்கள் ஜென்ம ராசிக்கு வர உள்ளார். இதனால் ஏதேனும் ஒரு வழியில் நினைத்தது நடக்கும். ஆறாம் இடத்திற்கும் அதிபதி குரு பகவானே என்பதால், அவர் ஜென்ம ராசியில் இடம் பெறும் நேரத்தில் மனசஞ்சலம் அதிகரிக்கும். கோயில்களுக்கு செல்லுதல், இயலாதவர்களுக்கு உதவுதல், தான தருமங்கள் செய்தல், சாதுக்கள், சந்யாசிகள், ஆன்மிக பெரியோர்களுடனான சந்திப்பால் மனசஞ்சலம் நீங்கும். எதிலும் அவசரப்படாது நிதானத்துடன் சிந்தித்து செயல்படுங்கள்.

ஜென்ம ராசியில் குரு அமர்வதால் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பிள்ளைப்பேறு வேண்டி காத்திருப்பவர்களுக்கு புத்ரபாக்யம் ஏற்படும். பிள்ளைகள் வாழ்க்கையில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். குடும்ப சூழ்நிலை காரணமாக பிள்ளைகளை விட்டு பிரிந்து வாழும் பெற்றோர்கள் அவர்களுடன் இணைவதற்கான வாய்ப்புகள் உருவாகும். திருமணத்திற்காக காத்திருப்போருக்கு நல்ல வரன் அமையும்.

பிரச்னைக்குரியவர்களிடமிருந்து விலகி இருப்பது நல்லது. திடீர் தொலைதூர பயணங்களுக்கான வாய்ப்புகள் உருவாகும். வெளிநாடு செல்ல காத்திருப்போருக்கு நேரம் சாதகமாக இருக்கும். முன்னோர்களின் சொத்துகளால் அனுகூலம் உண்டு. கடன் பிரச்னைகள் தீரும். வழக்குகள் முடிவுக்கு வரும். பொறுப்புகள் கூடும். இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு %0 சதவீத நற்பலன்களை தரும்.




### சிம்மம்

11ஆம் இடத்து குரு தற்போது 12ஆம் இடத்திற்கு வந்து அமர்கிறார். இதனால் நினைப்பது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். குழப்பத்தால் தெளிவான முடிவெடுப்பதில் சிக்கல் ஏற்படும். எதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டு செய்ய முடியாது. எடுத்த பணியை வெற்றிகர மாக முடிக்க கூடுதல் அலைச்சலை சந்திக்க நேரும். ஆனால் அநாவசிய செலவுகள் குறையும். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் எனும் பழமொழி குருபகவானுக்கு பொருந்தாது. முக்கியமான பணிகளின் போது அடுத்தவர்களை நம்பி காத்திருக்க வேண்டி வரும்.

குடியிருக்கும் வீட்டில் மாற்றங்கள் செய்வீர்கள். வாகன சேர்க்கை உண்டு. தாயார் வழி உறவினர்களால் ஆதாயம் இருக்கும். குடும்பத்தில் சில கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். உடன்பிறந்தோருக்காக சில தியாகங்கள் செய்வீர்கள். அடுத்தவர்களுக்கு ஆலோசனைகள் சொல்வதை தவிர்ப்பது நல்லது. யாரையும் நம்பி ஜாமீன் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது கூடாது.

கொடுக்கல், வாங்கல் மற்றும் பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மிகவும் கவனத்துடன் இருப்பது அவசியம். ஆன்மிகத்துக்காக அதிகம் செலவழிப்பீர்கள். மனதில் குழப்பமான சூழல் நிலவும். கனவு தொல்லையால் உறக்கம் பாதிக்கும். பொதுவாக இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமற்ற நிலையை தந்தாலும் நீங்கள் அதிக தன்னம்பிக்கை உடையவர்கள் என்பதால் கவலை இல்லை. உங்களுக்கு 55 சதவீத நற்பலன்களை இந்த குருப்பெயர்ச்சி அருள்கிறது.




## கன்னி

11ஆம் இடத்துக்கு குரு பகவான் வரவிருப்பது கன்னி ராசிக்காரர்களுக்கு மிகவும் சாதகமான அம்சம். எடுத்த காரியங்களில் வெற்றியை பதிவு செய்வீர்கள். நினைத்த காரியங்கள் நல்லபடியாக நடைபெறும். தன்னம்பிக்கையோடு செயல்படுவீர்கள். ஏழரை சனியால் இருந்த சிரமங்கள் குறையும். மிகவும் விசேஷமான பல பலன்கள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும் வகையில் தனலாபம் இருக்கும். உண்மையான உழைப்புக்கான பலன் கிட்டும். நினைத்த காரியம் ஜெயமாகும். தனலாபத்தோடு ஸ்தான பலமும் உண்டாகும்.

புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் கிட்டும். உங்களது முயற்சிகளும், செயல்களும் மற்றவர்களுக்கு உதவும் வகையில் அமைந்து உங்கள் மதிப்பையும், மரியாதையையும் உயர்த்தும். உடன்பிறந்த சகோதரர் களுடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். முன்னோர்களின் சொத்து பிரச்னைகள் சுமுகமாக முடியும். குடும்பத்தில் சலசலப்பு நீங்கி கலகலப்பான சூழல் உருவாகும்.

நட்பு வட்டம் விரிவடையும். பொதுவாக இன்னும் ஒரு வருட காலத்திற்கு ஒவ்வொரு நாளும் உங்களுக்கு திருநாளாய் அமையும். ஜனன ஜாதகத்தில் பலமான திசை புக்தியை கொண்டவர்கள் சிறப்பான பெயரும், புகழும் அடைவார்கள். குறைந்த பலம் உடைய ஜாதகர் கூட குறிப்பிடத்தகுந்த நன்மை அடைவார்கள். இந்த குருப்பெயர்ச்சி கன்னி ராசிக்காரர்களுக்கு 90 சதவீதம் நற்பலன்களை தருகிறது.




## துலாம்

இந்த குருப்பெயர்ச்சி துலாம் ராசிக்காரர்களான உங்களுக்கு சில சங்கடங்களை தந்தாலும் நற்பெயரையும், நற்பலனையும் தரும். பத்தாம் இடத்து குரு பதவியை பறிப்பார் என்ற பழமொழி உங்களுக்கு பொருந்தாது. தொழிலில் அதிக அலைச்சலை தருவாரே தவிர பதவியை பறிக்கமாட்டார். சிந்தனைகளால் வாழ்க்கை தரம் உயர துவங்கும். பொருளாதார நிலை வலுப்பெறும். இரண்டாம் இடமாகிய தனஸ்தானத்தின் மீது குரு பகவானின் பார்வை விழுவதால் சேமிப்புகள் உயரும். குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கி மகிழ்ச்சி குடிபுகும்.

பொறுப்புகள் கூடும். உங்கள் பேச்சுதிறமை நற்பெயரை வாங்கி கொடுக்கும். உடன்பிறந்தோரால் இழப்புகள் ஏற்படும். முக்கிய பணிகளில் இடைத்தரகர்களையும் அடுத்தவர்களையும் நம்ப வேண்டாம். மாற்று மதத்தினருடன் பழகும்போது அதிக எச்சரிக்கை தேவை. செல்போன், இன்டர்நெட் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களால் அவசர நேரத்தில் சங்கடங்கள் தோன்றலாம்.

எதிலும் நிதானம் தேவை. சுகஸ்தானமாகிய நான்காம் வீட்டின் மீது குருபகவானின் நேரடிப்பார்வை விழுவதால் வீடு, வாகனம், மனை வாங்குவீர்கள். வீட்டில் மாற்றங்கள் செய்வீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்கள் சேரும். தாயார் வழி உறவினர்கள் உங்கள் உதவி நாடி வருவார்கள். பொதுவாக இந்த குருப்பெயர்ச்சியால் உங்கள் உழைக்கும் திறன் உயர்வடையும். சமுதாயத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். 60 சதவீத நற்பலன்களை குரு பகவான் அளிக்கிறார்.




## விருச்சிகம்

கடந்த சில மாதங்களாக ஏழரை சனியால் அவதிப்பட்டு வரும் விருச்சிக ராசி அன்பர்களே உங்களுக்கு இந்த குருபெயர்ச்சியால் நிம்மதி கிடைக்கும். 8ம் இடமாகிய விரய ஸ்தானத்தில் இது வரை சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது உங்கள் ஜென்ம ராசிக்கு 9ம் இடமாகிய பாக்ய ஸ்தானத்திற்கு இடம் பெயர உள்ளார். தர்ம, நியாயத்திற்குப் புறம்பான விஷயங்களை ஒதுக்கிவிட்டு சரியான பாதையில் பயணிப்பீர்கள். பாக்ய ஸ்தான குருவால் மனதில் தர்ம சிந்தனைகள் அதிகரிக்கும். தன்னம்பிக்கையோடு எல்லா பிரச்னைகளையும் எதிர்கொள்வீர்கள்.

முழு ஈடுபாட்டோடு நீங்கள் செய்யும் செயல்களில் வெற்றி உறுதியாகும். சஞ்சலங்கள் நீங்கும். குடும்பத்தில் சலசலப்புகள் விலகும். கடன் சுமை குறையும். ஏழரை சனியின் தாக்கம் குறைந்து நற்பலன்கள் ஏற்படும். அநாவசியமான பயம் நீங்கும். உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடு விலகும். சகோதர, சகோதரிகளுக்கு உதவிகள் செய்வீர்கள்.

அளவாக பேசி நற்பெயர் காண்பீர்கள். நினைத்த காரியங்கள் நிறைவேறும். நெடுநாளைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். குடியிருக்கும் வீட்டில் புதிய மாற்றங்களை செய்வீர்கள். சொந்த வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். புது வாகன சேர்க்கை உண்டு. பொதுவாக இவ்வருடத்தில் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருக்கும். தடைகள் விலகி கவுரவம் உயரும். இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு %0 சதவீத நற்பலன்களை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனுசு




8ஆம் இடத்துக்கு இடம் பெயர உள்ள குருவால் நினைப்பது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். டிசம்பர் மாதம் முதல் ஏழரை சனியின் காலம் துவங்குவதால் சோதனைகள் இருக்கும். ஜாதகத்தில் நல்ல தசாபுக்தி நடைபெற்று வந்தால் பிரச்னை ஏதும் இல்லை. குருபார்வை விலகுவதால் மனதில் லேசான சோம்பேறித்தனம் குடிகொள்வதோடு சற்று அசட்டையாகவும் செயல்படுவீர்கள். இறங்கிய செயல்களில் முழுமையான வெற்றி கிடைப்பதில் சங்கடங்கள் இருக்கும். சோம்பலை விட்டொழித்து கடுமையாக உழைத்தால் காரிய வெற்றி கிடைக்கும்.

மனதுக்கு பிடிக்காத சம்பவங்கள் நடைபெறும். மனோதைரியம் குறையும். தேவையற்ற கற்பனைகளால் அநாவசிய பயம் தோன்றும். மருத்துவ செலவுகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. யாரை நம்பியும் ஜாமீன் பொறுப்பு ஏற்கக் கூடாது. சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது அவசியம். பொதுவாக இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு பெரும் போராட்டத்தை தரலாம். அதில் இருந்து விடுபட தேவையற்ற விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். இந்த வருடத்தின் அனுபவ பாடங்கள் பிற்காலத்தில் உங்கள் முன்னேற்றத்துக்கு துணை நிற்கும். 40 சதவீத நற்பலன்களை தரும் வகையில் இந்த குருப்பெயர்ச்சி அமைந்துள்ளது.

## மகரம்




உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி மனமகிழ்ச்சியை தரும். ஆறாம் இடத்திலிருந்து ஏழாம் இடத்திற்கு வரும் குரு பகவானால் உங்கள் ஆசைகளும், விருப்பங்களும் விரைவில் நிறைவேறும். பல்வேறு புதிய விஷயங்களை அறிந்துகொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை தரம் உயரும். எந்த ஒரு விஷயத்திலும் மிகுந்த தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு சிறப்பான வளர்ச்சி மற்றும் வெற்றி காண்பீர்கள். குழப்பங்கள் அகலும். எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

புத்திசாலித்தனமான பேச்சால் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வீடு, மனை போன்ற அசையா சொத்துக்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகும். புதிய வீடு கட்டும் முயற்சியில் உள்ளோருக்கு சாதகமான நேரம் அமையும். மனதைரியம் அதிகரிக்கும். உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்க இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக நீங்களே களத்தில் இறங்குவது நல்லது.

நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பாக்கி வசூலாகும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் கிட்டும். நிலுவையில் உள்ள சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமான முடிவுக்கு வரும். பொதுவாக இன்னும் ஒரு வருட காலம் சிறப்பான நற்பலன்களை காண உள்ளீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். 85 சதவீத நற்பலன்களை குருபகவான் அருள்கிறார்.

## கும்பம்




இதுநாள் வரை ஐந்தாம் இடத்தில் வாசம் செய்து வந்த குரு பகவான் வரும் 13.06.2014 முதல் ஆறாம் இடத்துக்கு வந்து உள்ளார். சகட யோகம் என்று சொல்லக்கூடிய குருவின் ஆறாம் இடத்து சஞ்சாரம் இறங்கிய காரியங்களில் தடங்கல்களை ஏற்படுத்தும். எந்த ஒரு விஷயமும் எளிதில் முடிவடையாது இழுபறியை தோற்றுவிக்கும். எடுத்த காரியங்கள் எளிதில் முடிவடையாது தாமதமாவதால் மன சஞ்சலத்திற்கு ஆளாவீர்கள். இந்த குருப்பெயர்ச்சி சில சங்கடங்களை தரக்கூடும்.

ஆறில் குரு பகவான் அமர்வது சிரமம் என்றாலும் அவரது சிறப்பு பார்வை தன ஸ்தானத்தின் மீது விழுவதால் தனவரவு தொடரும். கடன் பிரச்னைகளால் சற்று அவதிப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனிமையாக பேசுவீர்கள். ஆறாம் இடத்து குரு ஆத்ம ஞானம் தருவதோடு, ஆன்மிக பணிகளிலும் ஈடுபடுத்துவார். நியாய, தர்மங்களை அலசி ஆராய்ந்து அடுத்தவர்களுக்கு அறிவுரை கூறும் திறன் வளரும். உங்களது பேச்சுக்கு மதிப்பும், மரியாதையும் கூடும். உறவினர்களோடு விரோதத்தை தவிர்க்க சற்று விலகியிருப்பதும், அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வாகனங்களை இயக்கும்போது எச்சரிக்கை அவசியம். வீட்டில் திருத்தம் பணிகள் செய்வதை தவிர்க்கவும். ஒரு வருடத்திற்கு எந்த ஒரு பணியிலும் மிகுந்த நிதானத்தோடும் கவனத்தோடும் ஈடுபட வேண்டும். வீண் கற்பனைகளால் இனம்புரியாத பயம் மனதில் குடி கொள்ளும். தெய்வ நம்பிக்கையின் மூலம் மனத்தெளிவு காண முற்படுங்கள். குருப்பெயர்ச்சியினால் 50 சதவீத நற்பலன்களை அடைவீர்கள்.

## மீனம்




குரு பகவான் நான்காம் இடத்தில் இருந்து ஐந்தாம் இடத்துக்கு இடம் பெயர உள்ளார். மனதில் நற்சிந்தனையை தோற்றுவித்து எடுக்கும் செயல்களில் உடனுக்குடன் வெற்றி காண்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். பரோபகார சிந்தனைகள் மனதை ஆக்கிரமிக்கும். நல்ல நண்பர்கள் சேர்க்கை இருக்கும். கஷ்டங்கள் குறையும். மனதில் சந்தோஷம் குடிபுகும். பொழுதுபோக்கு அம்சங்களில் அதிக நாட்டம் கொள்வீர்கள். பிள்ளைகளின் வழியில் சுபநிகழ்வுகளை சந்திப்பீர்கள். சாதுக்கள், சன்யாசிகள், சான்றோர்களுடனான சந்திப்பால் மன சாந்தியும், நிம்மதியும் உண்டாகும்.

தன்னம்பிக்கை கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் ஆலோசனைகள் அடுத்தவர்களுக்கு உதவியாக அமையும். மனதுக்கு பிடித்தமானதை அனுபவிக்கும் வாய்ப்புகள் நாடி வரும். குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பீர்கள். உடன் பிறந்தோருடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

இதுநாள் வரை விலகியிருந்த சொந்தம் ஒன்று உங்களை நாடி வரலாம். பூர்வீக சொத்து பிரச்னைகள் அகலும். திருமணத்தடை அகன்று மணவாழ்க்கையில் அடியெடுத்து வைப்பார்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற துவங்கும். பிள்ளைப்பேறுக்காக காத்திருப்போருக்கு குழந்தை பாக்யம் கிட்டும். பொதுவாக 80 சதவீத நற்பலன்களை குரு பகவான் உங்களுக்கு அள்ளி தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






30 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு உதயன் குழுமம் நயினாதீவில் நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுடன் ஞானக்கதிர் ஆசிரியர் குழுவினர்.



சமய அறிவுப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றிய போட்டியாளர்கள் இறுதி முடிவை எதிர்பார்த்து நிற்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் இதயம் கவர்ந்த தங்க
நகையின் தரத்தின் சின்னம் உதயா

தரமான தங்கத்துக்கு
உதயா ஜீவலர்ஸ்க்கு விஜயம் செய்யுங்கள்.
பழைய நகைகளை எவ்வித கழிவுமின்றி புதிய
நகைகளாக மாற்ற



# உதயா ஜீவல்லர்ஸ்



இல. 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



# அன்னை சிவகாமி அறக்கட்டளை கல்விநிலையம் நயினாதீவு - 03

ஆலயங்களின் அறப்பணியில்... ஏழைச்சிறார்களின் எழுத்தறிவூட்டலில்...
பாடசாலைகளின் பௌதீகவள விருத்தியில்... சமூகநல உதவித்திட்டங்களில்...







Mahadevan Sathiyaruban
M.S.R. House, 329, Lake Street,
London U.K

சின்னத்தம்பி மகாதேவன்
ஓய்வுநிலை ஸ்ரீலங்கா ரெலிகொம்
தொழில்நுட்ப அதிகாரி நயினாதீவு -03
T.P: 077 817 7706


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org